பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 01 புதன்கிழமை 15.01.2020 கதிர் 71

**இது ரகசியம் அல்ல!**

'அரண்டவன் கண்ணுக்கு இருண்டது எல்லாம் பேய்' – என்பார்கள். நமது 'தமிழ் தேசியம்' பேசும் அரசியல்வாதிகளின் நிலைமையும் அதுதான் போலும்.

மனப்பிறழ்வு கொண்ட ஒருவர் எங்கள் உள்ளூர் அரசியல்வாதிகளை எல்லாம் பக்கம் 02




# தீர்வைத் தமிழர் இந்தியாவிடம் கோருவதில் அர்த்தமே இல்லை!

**தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களிடம் வெளிப்படையாகவே கூறினார் மஹிந்த**

கொழும்பு, ஜன. 15

வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு - தமிழர் பிரச்சினைக்கு - தீர்வை இந்தியா தரவேண்டும் என்பது போன்ற செய்திகளை ஊடகங்களில் பார்த்தேன். அதில் எனக்கு உடன்பாடில்லை. தீர்வு எம்மிடமே உள்ளது. அதை விடுத்து தீர்வை வெளியில் தேடுவதில் அர்த்தமில்லை.நாம் எமது பிரச்சினைகளை ஒன்றுபட்டு தீர்க்க வேண்டும். அவற்றைத் தொடரவிடுவதில் அர்த்தமில்லை. பக்கம் 03

# பிரதமர் மோடியின் பிரதிநிதி கொழும்பு வந்து திரும்பினார்



## ராஜபக்ஷ சகோதரர்களுடன் சத்தம் சந்தடியின்றிச் சந்திப்பு

கொழும்பு.ஜனவரி.15

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட பிரதிநிதியாக – அவரின் முக்கிய செய்தி ஒன்றுடன் – இந்தியாவின் ஆளும் பாரதீயக் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் ராம் மாதவ் ஓரிரு நாள்களுக்கு முன்னர் சத்தம் சந்தடியின்றி ஒரு நாள் பயணமாகக் கொழும்பு வந்து திரும்பியிருக்கின்றார் என அறிய வருகிறது. அவர் கொழும்பில் தங்கியிருந்த ஒரு சில மணி நேரத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் தனித் தனியாகச் சந்தித்துப் பேசியிருக்கின்றார் என்றும் கூறப்பட்டது. பக்கம் 03




## அமெ. உதவிச் செயலர் சம்பந்தனுடன் சந்திப்பு



கொழும்பு, ஜன. 15

இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அமெரிக்க உதவி பக்கம் 03

## சுமந்திரன் தலைவராவது தமிழருக்குச் சாபக்கேடு!

**சுரேஷ் பிரேமச்சந்திரன் காட்டம்**



யாழ்ப்பாணம், ஜன. 15

தமிழ் மக்களின் தலைவராக சுமந்திரன் வருவராக இருந்தால் அது தமிழ் மக்களுக்கான சாபக்கேடாக அமையும் என்று பக்கம் 03

## 19 நாள்களுக்கு தேவையான எரிபொருள் இருப்பு உள்ளது

**பெற்றோலிக் கூட்டுத்தாபனம் அறிக்கை**

கொழும்பு, ஜன. 15

நாட்டில் தற்போது 47 ஆயிரத்து 947 தொன் 92 ஒக்ரைன் பெற்றோலும் 16 ஆயிரம் தொன் 95 ஒக்ரைன் பக்கம் 02

## பயங்கரவாதப் பட்டியலில் மீண்டும் புலிகள் இயக்கம்!

**அறிவிப்பை வெளியிட்டது ஐரோப்பிய ஒன்றியம்**

பிரஸ்சல்ஸ், ஜன. 15

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத அமைப்புக்களின் புதிய பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பெயர் மீண்டும் பக்கம் 02

## தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளம் 1000 ரூபா

**மார்ச் முதலாம் திகதி முதல் நடைமுறை**

கொழும்பு, ஜன. 15

மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த குறைந்த வேதனம் ஆயிரம் ரூபாவாக இருக்கவேண்டும் என ஜனாதிபதி பக்கம் 03

## இன்றைய கைது நடவடிக்கைகள் தண்டனையின் ஒரு பகுதியல்ல!

**கவனமாக நடக்கப் பொலிஸாருக்கு ஜனாதிபதி கோட்டாபய பணிப்புரை**

கொழும்பு, ஜன.15

கைது நடவடிக்கைகள் தண்டனையின் ஒரு பகுதியல்ல என்பதுடன், அவை கைது செய்யப்படும் நபரின் நற்பெயருக்கும் சமூக தகுதி நிலைக்கும் பெரிதும் பாதிப்பு ஏற்படுத்தக் கூடியது என்பதால் அது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள் பக்கம் 03

## உலகில் பலம் மிக்க நான்கு நாடுகளின் பிரதிநிதிகள் ஒரே நாளில் இலங்கைக்கு



கொழும்பு, ஜன. 15

உலகில் பலம் வாய்ந்த நான்கு நாடுகளின் உயர் மட்ட பிரதிநிதிகள் கடந்த 24மணி நேரத்தில் இலங்கைக்கு வருகை தந்தமை ஒரு அரிய அரசியல் நிகழ்வாகும்என்று ஜனாதிபதிஊடகப் பிரிவு பக்கம் 02

## ரஞ்சன் எம்.பி. கைது!



கொழும்பு, ஜன. 15

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்றஉறுப்பினருமானரஞ்சன் ராமநாயக்க கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பக்கம் 03

## 19 நாள்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோலும் ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 957 தொன் டீசலும் கையிருப்பில் உள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

எனவே தற்போதுள்ள எரிபொருள் கையிருப்பு 19 நாள்களுக்கு விநியோகிக்கப் போதுமானது என்று கூட்டுத் தாபனம் குறிப் பிட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று செவ்வாய்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

நாட்டில் போதுமான எரிபொருள் இருப்பு உள்ளது. எரிபொருள் பற்றாக்குறை குறித்து பொதுமக்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. தற்போதுள்ள எரிபொருள் இருப்பு 19 நாள்களுக் குப் போதுமானது.

மேலும், ஜனவரி 17 மற்றும் 18 ஆகிய திகதிகளில் கொழும்பில் 16 ஆயிரம் தொன் எரிபொருளை ஏற்றிக்கொண்டு கப்பல்கள் வர விருக்கின்றன. அத்துடன், 15 ஆயிரம் தொன் எரிபொருள் ஜனவரி 24 மற்றும் 25 ஆகிய திகதிகளில் வரவிருக்கிறது.

பாரசீக வளைகுடா பிராந்தியத்தில் போர்ப் பதற்றம் ஏற்பட்டதால் சிங்கப்பூர் மற்றும் மலேசியாவிலிருந்து எரிபொருளை மேலதிகமாக வாங்கப் பெற்றோலிக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது.

தற்போதைய எரிபொருள் இருப்புக்கள் பின்வருமாறு உள்ளன.:- பெற்றோல் (92 ஒக்ரைன்) – 47 ஆயிரத்து 947 தொன், பெற்றோல் (95 ஒக்ரைன்) – 16 ஆயிரம் தொன், லங்கா ஓட்டோ டீசல் – ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 957 தொன், சுப்பர் டீசல் – 4 ஆயிரத்து 463 தொன், விமான எரிபொருள் – 38 ஆயி ரத்து 86 தொன் மற்றும் 70 ஆயிரத்து 130 தொன் ஒயில் என்பன கையிருப்பில் உள்ளன.

இந்த இருப்பு மதிப்பீட்டில் வரவிருக்கும் எரிபொருள் இருப்பு சேர்க்கப்படவில்லை – என்றுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையேயான நெருக்கடி நிலை காரணமாக பாரசீக வளைகுடாவில்போர்வெடித்தால்எரிபொருள் வழங்கல்தொடர்பான நிலைமையை மதிப்பிடுவதற்காக நேற்றுச் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று மின் மற்றும் எரிசக்தி அமைச்சில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பயங்கரவாதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளடக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் தனிநபர்கள், குழுக்கள் மற்றும் அமைப்புகளைத் தடை செய்யப்பட்ட பயங்கரவாதப் பட்டியலாக ஐரோப்பிய ஒன்றியம் வெளியிடுவது வழக்கம்.

அந்த வகையில் இவ்வருடத்துக்கான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 21 பயங்கரவாத அமைப்புக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பெயரும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த 30 வருடங்களாக நடைபெற்று வந்த உள்நாட்டு யுத்தத்தில் இலங்கை அரசுக்கு எதிராக செயற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியுடன் மௌனிக்கப்பட்டன.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களின் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து அதே ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தால் 1373/2001 தீர்மானத்தின் கீழ் இந்தப் பட்டியல் முதன் முதலாக வெளியிடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து உறுப்பு நாடுகளின் பயங்கரவாதம் தொடர்பான வழக்கமான தகவல் பரிமாற்றங்களின் அடிப்படை யில்இந்தப் பட்டியல் சீரான இடைவெளியில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில்,ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியத்தினால் பயங்கரவாத அமைப்பாகப் பெயரிடப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பெயர் இம்முறை வெளியிடப்பட்டிருக்கும் பட்டியலிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புப் பட்டியலில் இருந்து நீக்குமாறு பல நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

கடந்த ஆண்டு இந்தியாவும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் தொடர்ந்தும் உள்ளடக்கியது.

இந்த விடயம் தென்னிந்திய அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உலகில் பலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் எலிஸ் வேல்ஸ், சீன வெளிவிவகார அமைச்சர் வேன்ங் ஈ, ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்கே லெவ்ரோவ் மற்றும் ஜப்பான் இராஜாங்க அமைச்சர் கொசோ யமமோடோ ஆகியோர் நேற்றுப் பிற்பகல் வரை இலங்கையில் தங்கியிருந் தனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

வீழ்ச்சியுற்றிருக்கும் பொருளாதாரத்தைமீண்டும்கட்டியெழுப்புவது தனது பதவிக் காலத்தினுள் எதிர்பார்க்கும் முக்கிய விடயமாகும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உலகின் பலம்வாய்ந்த நாடுகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்களை பாராட்டிய பிரதிநிதிகள், இலங்கை ஆரம்பித் துள்ள பொருளாதார மறுசீரமைப்புக்கு தமது முழுமையான ஒத் துழைப்பை வழங்குவதாகத் தெரிவித்தனர்.

அச்சத்திற்குள்ளாகியிருந்த சமூக மற்றும் மக்கள் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வந்து நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியிருப்பதை அனைத்து பிரதிநிதிகளும் பாராட்டினர்.

ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகவுள்ள அனைத்து துறைகளி லும் துரித அபிவிருத்தியை அடைந்துநாட்டை முன்கொண்டு செல்லும் முயற்சிக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தெரிவித்தனர் – என்றுள்ளது. (ஐ)

# காணாமற்போன மருத்துவபீட மாணவன் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜன. 15

கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மலையகத்தை சேர்ந்த மருத்துவ பீட மாணவன் நான்கு நாள்களின் பின் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாணவனின் சடலம் வவுண தீவுப் பகுதியில் கரை ஒதுங்கிய நிலையில் நேற்றுச் செவ்வாய் கிழமை மீட்கப்பட்டது.

மாணவனைக்காணவில்லை என்று அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் கடந்த 10 ஆம் திகதி இரவு முறைப்பாடு செய்யப்பட்டது.

அக்கரப்பத்தனை ஹோல்புறுக் பகுதியைச் சேர்ந்த, கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் சின்னதம்பி மோகன்ராஜ் (வயது 21) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டாம் வருடம் கல்வி பயின்றுக்கொண்டிருந்த அவர் கடந்த 10 திகதி கோயிலுக்குச் செல்வதாகச் சக நண்பர்களிடம் தெரிவித்துவிட்டு விடுதியிலிருந்து வெளியேறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து இரவு 10 மணி வரை அவர் வராததன் காரணமாக அவருடைய நண்பர் ஒருவர் மாணவனின் தாய்க்கு அழைப்பை ஏற்படுத்தி மோகன் ராஜிக்கு வேறு தொலைபேசி இலக்கம் ஏதும் உள்ளதா என வினவியுள்ளார்.

அதனை தொடர்ந்து சந்தேகம் கொண்ட குடும்பத்தினர் குறித்த மாணவனின் தொலைபேசிக்கு பல தடைவைகள் அழைப்பு விடுத்த போதிலும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

இந்த நிலையிலேயே அக்கரபத்தனை பொலிஸ் நிலையத்தில் கடந்த 10 ஆம் திகதி இரவு முறைப்பாடு செய்யப்பட்டது.(ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில மணி நேரம் மனப்பிறழ்வு கொள்ள வைத்த அதிசயத்தை நேற்று அவதானித்தபோது இந்தப் பழமொழிதான் எனக்கு நினைவுக்கு வந்தது. நடந்தவை இவைதான்.:–

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில், நகர பஸ் நிலையம், வைரவ கோவில் ஆகியவற்றுக்கு முன்னால் முன்னர் வட்டச் சுற்று வட்டம் இருந்த மையப் பகுதியில் ஒரு சிறிய கொடி ஒன்று நேற்றுக்காலை திடீரென முளைத்திருந்தது. சில பழைய கொங்கிறீட் கற்களை அடுக்கி அவற்று மத்தியில் மூன்றடி உயர கம்பி ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. அந்தக்கம்பியில்சுமார் இரண்டு, மூன்று அடி உயரத்தடி கட்டப்பட்டிருந்தது. அந்தத் தடியில் வெசாக் சோடனைகளில் கட்டப்படும் ஒரு சிறிய பௌத்த கொடித் துண்டு கட்டப்பட்டிருந்தது. தடியும் கம்பியும் சந்திக்கும் இடத்தில் சில வெள்ளைப் பூக்கள் செருகப்பட்டிருந்தன. அந்தத் தடியும், கம்பியும், கட்டப்பட்டிருந்த விதத்திலேயே – கயிறும், தும்புமாகத் துண்டுகளைக் கொண்டு அது சுற்றப்பட்டிருந்த முறையிலேயே அதைச் செய்தவர் யாராக இருக்கும் என்பதை ஊகிக்கக் கூடியதாக இருந்திருக்கும்.

ஆனால், இதைக் கண்டதும் நமது ‘தமிழ்த் தேசியவாதிகள்’ எல்லாம் கொதித்தெழுந்து விட்டனர். அவர்கள் எவ்வளவு தூரம் கண் கொத்திப்பாம்பாக விவகாரங்களுக்காக – அலேர்ட்’ ஆக – காத்திருக்கின்றார்கள் என்பதை அறியும் போது மகிழ்வாகத்தான் இருக்கின்றது.

ஒரு சிறிய பௌத்த கொடி நகரின் மையத்தில் முளைத்து விட்டால் போதாதா விடயங்களை கிளறிப் பெரிதாக்குவதற்கு? அதுவும் நமக்கு ஈர் கிடைத்தால் போதும். ஈரைப் போனாக்கி, பேனைப் பெருமாள் ஆக்கும் கலையில் கை வந்தவர்கள் அல்லவா நாங்கள்...!

இந்தக் கொடியை வைத்தே ஒரு சில நிமிடங்களுக்குள் முகப் புத்தகங்கள், இணையத் தளங்கள் என்று சமூக ஊடகங்கள் கதறத் தொடங்கி விட்டன. இதற்குள் ஊடக நிறுவனங்களின்மின்அஞ்சல்பெட்டிகளிலும் அறிக்கைகள் வரத் தொடங்கி விட்டன. இந்தக்கொடி தொடர்பில் நேற்றுக் காலை எமது மின்னஞ்சலுக்கு உள்ளூர் அரசியல்வாதி ஒருவரினால் அனுப்பி வைக்கப்பட்ட கண்டன அறிக்கை பின்வருமாறு அமைந்தது:–

*“சிங்கள, பௌத்த மயமாக்கல் மற்றும் நில ஆக்கிரமிப்புக்கான ஆரம்பப் புள்ளியாக யாழ். நகரின் மத்திய பகுதியில் சிங்கள, பௌத்த கொடி நிறுவப்பட்டுள்ளது. யாழ்.பஸ்நிலையத்திற்கு அருகில் உள்ள சந்தியில் காணப்படுகின்ற மணிக் கூட்டுக் கோபுரத்தின் கீழ் இந்த கொடி நிறுவப்பட்டுள்ளது.*

*நன்கு திட்டமிடப்பட்டு, எங்கிருந்தோ கொண்டு வரப்பட்ட கற்களை ஒன்று சேர்த்து ஒரு மேடை போல் அமைக்கப்பட்டு பின்னர் ஒரு கம்பியில் இக் கொடி நிறுவப்பட்டுள்ளது. அத்துடன் அக் கொடியின் கீழ் மலர்கள் சூடி வணக்கமும் செலுத்தப்பட்டுள்ளது.*

*அங்கிருந்த கடை வியாபாரிகளுடன் வினாவிய போது இங்கு நிறுவப்பட்டுள்ள கொடி மற்றும் கற்கள் கம்பிகள் எவையும் இங்கு காணப்படவில்லை, அவை எங்கிருந்தோ கொண்டு வரப்பட்டு இது நிறுவப்பட்டுள்ளதாகவும் தாங்கள் காலையில் வரும்போதே இது காணப்பட்டதாகவும் தெரிவித்தார்கள்.*

*சிங்கள, பௌத்த பேரினவாதம் எமது பூர்வீக நிலைங்களை மெல்ல மெல்ல விழுங்க முயற்சிக்கின்றது. ஆனால் அதனை நாம் தமிழ்த்தேசமாக ஒன்று திரண்டு நிறுத்த வேண்டும்.*

*நாம் என்ன வகையான ஆயுதத்தை எடுக்க வேண்டும் என்று எம்முடைய எதிரியே தீர்மானிக்கின்றான் என்கின்ற மாவோ இன் கருத்துப்படி, சிங்கள, பௌத்த பேரினவாதம் எங்களுடைய தமிழ்த்தேசத்து நிலங்களை இவ்வகையான சின்னங்களை நிறுவி மெல்ல மெல்ல பௌத்த மயமாக்கலுக்கு உட்படுத்தி அதனைப் பறித்தெடுகின்ற செயற்பாடுகள் தொடருமாயின் நாம் எமது மிகவும் தொன்மையான தமிழ் வரலாற்றினை, அதன் பெருமைகளை எடுத்துக் கூறுகின்ற நினைவுச் சின்னங்களை எமது தாயக மண்ணை பறிபோதலை தடுக்கும் நோக்குடன் எமது பிரதேசங்கள் எங்கும் நிறுவும் நிலை ஏற்படலாம் என்பதனையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஏன் எனில் சிங்கள, பௌத்த பேரினவாதத்திற்கு எவ்வாறு எங்கள் நிலங்களை பறித்தெடுகின்ற, இனவிகிதாசாரத்தை மாற்றியமைக்கின்ற, பௌத்த மயமாக்கலுக்கு உட்படுத்த அக்கறை இருக்கின்றதோ, அதே அக்கறை எமது தாயகப் பிரதேசங்கள் பறிபோகமல் தடுப்பதிலலுமே எமக்கு இருக்கின்றது.”* – இப்படி அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது ஒரு ஸாம் பிள்தான்.

இந்தக் கொடியைக் கண்டதும் நமது உள்ளூர் அரசியல்வாதிகள் அங்கு திரண்டு விட்டனர். ஆனால் யாருக்கும் அதை அகற்றும் தைரியமிருக்கவில்லை. இரவோடு இரவாக இரா ணுவம் இதனை வைத்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்டார்ஒருவர்.இராணுவம் வைத்த பௌத்த கொடியை அகற்றப்போனால்சிக்கல்வரும் என்று பயந்தனர் அனைவரும்.

யாழ்.நகர பிதா உடனடியாக யாழ்.பிரிகேட் மேஜருடன் தொடர்பு கொண்டு பேசினார். அவர் தன் பங்குக்குத் தனது அதிகாரிகள், சிப்பாய்களுடன் உரையாடிவிட்டு அதற்கும் தங்களுக்கும் தொடர்பு ஏதுமில்லை என அறிவித்தார். அதையடுத்து வடபகுதி கட்டளைத் தளபதியின் பலாலித் தலைமையலுவலகத்துடன் தொடர்பு கொண்டனர். அவர்களும் தங்களுக்குத் தெரியாது எனக் கைவிரித்தனர்.

இந்தக் கொடியின் சூத்திரதாரி யார் என்று அக்கம் பக்கத்தில் உள்ள கடைக்காரர்கள் எல்லோரிடமும் வரிசையாக விசாரித்தனர். எல்லோரும் கைவிரித்தனர்.

காலையில் தாங்கள் வரும்போது அது அங்கு நிலை நிறுத்தப்பட்டிருந்தது என்றனர்.

கடைசியாக ஒரு கடைக்காரர் தான் நடந்ததைச் சொன்னார்.

*“இதுவா? இதை விடிகாலையில் தலை சுகமில்லாத ஒருவர் வந்து கற்களை அடுக்கி நிறுத்தினார். நான் வேடிக்கை பார்த்து விட்டுப் போனேன்”* – என்று குறிப்பிட்ட போதுதான் உண்மை அம்பலமானது.

*“மனம் பிறழ்வான ஒருவர் நாங்கள் – அரசியல்வாதிகள் – எங்கள் எல்லோரையும் தன் நுட்பமான வேலையால் மனம் பிறழ்வானவராக ஆக்கி விட்டாரே!”* – என்று உண்மையை ஒப்புக் கொண்டார் யாழ் மாநகர சபை உறுப்பினர் ஒருவர்.

இந்த நுணுக்கமான குழப்ப வேலையைச் செய்து தங்களை சில மணி நேரம் அங்கலாய்ப்புக்குள்ளும் அவஸ்தைக்குள்ளும் மாட்டிவிட்ட – குசும்புத்தனம் பண்ணிய – பிரகிருதி யார் என அவர்கள் தேடிப்பார்த்தனர்.

அண்மையில் யாழ் நகரில் கட்சி ஒன்றின் அலுவலகத்துக்கு முன்னால் காணாமல் போனோரின் உறவுகள் சிலர் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்திய போது அவர்களின் பதாகைகளைப் பறித்து குழப்பம் ஏற்படுத்திய மனக்குழப்பக்காரர்தான் அவர் என்பது அப்போது தெரியவந்ததாம்!

எது, எப்படியோ... தமிழ்த் தேசியக் காவலர்கள் படு அலேர்ட்டாக – மிக எச்சரிக்கையாக – இருக்கின்றார்கள் என்பது மட்டும் நிச்சயம். அந்த வகையில் மகிழ்ச்சிதான்.

–மின்னல்–

## தீர்வைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

–இவ்வாறு நேற்று வெளிப்படையாகத் தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

தமிழ் ஊடகங்களின் செய்திப் பொறுப்பாளர்கள் – பத்திரிகை ஆசிரியர்களை நேற்றுக் காலை அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா,ஆறுமுகம் தொண்டமான், பந்துல குணவர்தன, சி.பி.ரத்நாயக்க, லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன. மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அங்கு பிரதமர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் ஊடகங்கள் மிகவும் பொறுப்பாக செயற்படவேண்டும். அரசையும் மக்களையும் ஊடகங்கள் விரோதப்படுத்தக் கூடாது. ஊடகங்கள் உண்மையான விமர்சனங்களை வெளிக்கொணர வேண்டும். தமிழ் மக்கள் எமக்கு வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் அவர்களுக்கான எமது சேவைகள் தொடரும். வடக்கு – கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு –தமிழர் பிரச்சினைக்கு – தீர்வை இந்தியா தரவேண்டும் என்பது போன்ற செய்திகளை ஊடகங்களில் பார்த்தேன். அதில் எனக்கு உடன்பாடில்லை. தீர்வு எம்மிடமே உள்ளது. அதைவிடுத்துத் தீர்வை வெளியில் தேடுவதில் அர்த்தமில்லை. நாம் எமது பிரச்சினைகளை ஒன்றுபட்டுத் தீர்க்க வேண்டும். அவற்றைத் தொடர விடுவதில் அர்த்தமில்லை.

### தமிழ் அரசியல் கைதிகள்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஆராயப்படுகிறது. இது தொடர்பில் அறிக்கையொன்று நீதியமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் அடிப்படையில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் எடுப்பது குறித்து ஆராயப்படும்.தடுத்து வைக்கப்பட்டுள்ள சிலருக்கு பாரதூரமான குற்றங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. இருந்தாலும் நாங்கள் அதனை ஆராய்வோம்.

### தொழிலாளர்கள் சம்பள பிரச்சினை

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பில் அமைச்சரவையில் இன்று(நேற்று) பேசப்படவுள்ளது. ஏற்கனவே ஜனாதிபதி அது தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.விரைவில் அது தொடர்பில் நல்ல பதில் அறிவிக்கப்படும். கம்பனிகளுடனும் இதுபற்றி பேசப்பட்டுள்ளது.

### தமிழில் தேசிய கீதம்

தமிழில் தேசிய கீதம் பாடக் கூடாது என்று எந்தத் தடையும் அரசு விதிக்கவில்லை. அரசில் உள்ள கூட்டணிக் கட்சித் தலைவர்கள் யாரும் அது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தால் அது அவர்களின் கருத்தாக இருக்குமே தவிர, அது அரசின் கருத்தாக இருக்காது. அப்படியொரு நிலைப்பாட்டை அரசு எடுக்கவில்லை. ஆனால் சிங்கப்பூர், கனடா, இந்தியா போன்ற நாடுகளை போல தேசிய கீதம் ஒரு மொழியில் இருக்கலாம். அதேசமயம் இங்கு நான் ஒரு தமிழ் பாடசாலைக்கு போனால் அங்கு தமிழில் தேசிய கீதம் பாடுகிறார்கள்.தென்பகுதியில் நிகழ்வுகளுக்கு சென்றால் சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்படுகிறது. பிரதேச ரீதியாக இவை அமுலில் உள்ளன.ஆனால் யாரும் அதனைத் தடை செய்யவில்லை. தேசிய கீதம் தமிழில் பாடவேண்டுமெனச் சொல்லப்படுவது அரசியல் தேவைகளுக்காகவே. உண்மை அதுதாம்.

### மீனவர் பிரச்சினை

இலங்கை – இந்திய மீனவர்களின் பிரச்சினை குறித்து இந்திய விஜயத்தின்போது நான் பேசவுள்ளேன். அதேசமயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இம்மாத இறுதியில் இதுபற்றி பேச்சு நடத்தவுள்ளார். உண்மையில் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பால் இலங்கை மீனவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். இதுபற்றி பேச்சு நடத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் – என்றார்.

இதற்கிடையில் – அரசில் முஸ்லீம் அமைச்சர்மார் எவரும் இல்லாதமை குறித்து செய்தியாளர் ஒருவர் கேள்வியெழுப்பியபோது பதிலளித்த பிரதமர், முஸ்லிம் பிரதிநிதிகளை அனுப்பி அந்த நிலையைச் சரி செய்ய முஸ்லிம் மக்கள் வரும் தேர்தல்களில் சிந்தித்து செயற்படவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

கடந்தமுறை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்த முஸ்லிம் ஒருவருக்கு அமைச்சுப் பதவியை வழங்க முடிவு செய்து பெயர்களை அனுப்புமாறு நாம் கேட்டோம். ஆனால் அவர்கள் பெயர்களை அனுப்பவில்லை. ஆனாலும் பைசர் முஸ்தபாவுக்கு அமைச்சுப் பொறுப்பை ஏற்கக் கோரினோம். அவர் மறுத்துவிட்டார். ஆனாலும் அடுத்த முறை தேர்தலில் முஸ்லிம் மக்கள் அதனைச் சரி செய்ய வேண்டும்.அ என்றார் பிரதமர்.

13 ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பான உங்களின் நிலைப்பாடென்ன என்று செய்தியாளர் ஒருவர் கேட்டபோது பதிலளித்த பிரதமர், தாம் அதே நிலைப்பாட்டில் இருப்பது உண்மை என்றார்.

ஜெனிவாவின் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான விவகாரம் குறித்து கேட்கப்பட்டபோது , தமது நட்பு நாடுகளுடன் இணைந்து அதனை எதிர்கொள்வோம் எனப் பிரதமர் கூறினார்.

இலங்கையில் தேர்தலொன்று வரவுள்ள சூழ்நிலையில் எவ்வாறாயினும் இம்மாதம் மார்ச்சில் இடம்பெறவுள்ள அமர்வில் இலங்கைக்கு எவ்வித சவால்களும் இல்லையெனவும் பிரதமர் குறிப்பிட்டார். (ஐ)

## அமெ. உதவிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்க செயலாளர் அலிஸ் வெல்ஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது என்னென்ன விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன என்பது குறித்து எந்தவித தகவல்களையும் கூட்டமைப்பின் ஊடகப்பிரிவு வெளியிடவில்லை.

எனினும் எதிர்வரும் ஜெனிவா மாநாட்டில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்படவுள்ள பிரேரணை, சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் வடக்கு – கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாழ்வியல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்கள் தொடர்பான உதவிச் செயலாளர் அலிஸ் வெல்ஸ் நேற்றுக் காலை கொழும்பு வந்து சேர்ந்தார். அவருடன் மூவர் அடங்கிய தூதுக்குழு அதிகாரிகளும் நாட்டை வந்தடைந்துள்ளனர். (ஐ)

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

நேற்று அவரது கோப்பாய் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தொடர்ச்சியாகத் தமிழ் மக்கள் பல்வேறுபட்ட இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தற்போது வந்துள்ள அரசு தமிழ் மக்கள் கொஞ்சமாவது அனுபவித்து வந்த அற்ப சொற்ப உரிமைகளைக் கூட இல்லாமல் செய்கின்ற போக்கைத்தான் கொண்டுள்ளமையையும் எங்களால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரும் பொதுத் தேர்தலை மையமாகக் கொண்டு தமிழ் மக்களுக்குப் பல்வேறு பொய்களைக் கூறி வாக்குக் கேட்கும் ஆயத்தங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்கனவே சம்பந்தன் தான் தேர்தலில் போட்டியிடமாட்டேன் என்று கூறியுள்ளார். மாவை சேனாதிராசாவும் பொதுத் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்கின்ற ஒரு கருத்தும் தற்போது பரவி வருகின்றது.

இவர்கள் தேசியப் பட்டியல் மூலம் உள்வாங்கப்படலாம் என்ற ஒரு கருத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் கூறப்பட்டு வருகின்றது.

தேர்தலில் போட்டியிடாமல் தலைவர்கள் தேசியப்பட்டியல் மூலம் வருவதற்கான காரணம் என்னவென்றால், மக்கள் அவர்களை நிராகரித்து விடுவார்கள் என்ற யோசனையில் அவர்கள் அவ்வாறான கருத்துக்களை முன்வைத்து வருவதையும் எங்களால் காணக்கூடியதாக உள்ளது.

மாவை சேனாதிராசா, ஒரு கருத்தைக் கூறி வருகின்றார். பொதுத் தேர்தலில் போட்டியிடுவது, போட்டியிடாமல் இருப்பது அது எனது சொந்தப் பிரச்சினை. அதனைப் பற்றி மற்றவர்கள் தீர்மானித்துக் கொள்ளவேண்டிய தேவையில்லை என்று அவர் கூறுகின்றார்.

தமிழ் மக்கள் தற்போது ஓர் இக்கட்டான சூழ்நிலையில் தள்ளப்பட்டுள்ளார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் கடந்த அரசிடமிருந்து எந்தவிதமான ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்டது. மாறாக அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு ஆதரவு தெரிவித்து வந்தனர். இதுவே அவர்களின் தவறான நோக்கமாகவும் இருந்தது.

மாறாக கடந்த கால அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டதே தவிர அவர்களுக்கு எந்தவிதமான தீர்வையும் பெற்றுக்கொடுக்க முடிந்திருக்கவில்லை.

மாவை சேனாதிராசா மற்றும் சுமந்திரன் போன்றவர்கள் எடுத்த தவறான முடிவுகளே தமிழ் மக்களை இவ்வாறான இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளியுள்ளது.

ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்திக்க முடியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸை சந்தித்துக் கலந்துரையாடி உள்ளது.

கம்பெரலிய திட்டத்தினூடாகக் கடந்த கால அரசின் மூலம் விடுவிக்கப்பட்ட நிதியை தற்போதுள்ள அரசு ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயன்று வருகின்றது.

இதன்மூலம் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் தமிழ் மக்களை கம்பெரலிய திட்டத்தினூடாக பொதுத் தேர்தலில் வாக்கு வங்கியை நிறைவு செய்வதற்கு முயற்சிக்கின்றனர் – என்றார். (ஐ-07)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராம் மாதவ், ஆளும் பாரதீய ஜனதாக் கட்சிக்குள் பிரதமர் மோடிக்கு மிக நெருக்கமான – நம்பிக்கைக்குரிய – தலைவர். கட்சியின் ஸ்வதேச உறவு விடயங்களின் முக்கிய பங்காற்றுபவர். இந்திய உப கண்டப் பிராந்தியத்தில் இந்தியா மேலும் அதிக ஈடுபாடுடைய பங்களிப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்ற தீவிரப் போக்குடையவர். சீனாவின் ஒரு பட்டி – ஒரு பாதை' முன்முயற்சிகளைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதற்காக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா தீவிரப் பங்கெடுக்க வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தி நிற்பவர்.

அவரே ஓரிரு தினங்களுக்கு முன்னர் – பெரும்பாலும் கடந்த ஞாயிறன்று – ஆரவாரம் ஏதுமின்றித் திடீரெனக் கொழும்பு வந்து, சில மணி நேரத்தில் திரும்பியிருக்கின்றார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துக்குக் கூட இந்த விஜயம் குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டேயிருக்கவில்லை எனக் கொழும்பு அரச வட்டாரங்கள் தெரிவித்தன. அவர் வந்த சமயத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் இலங்கையில் இருக்கவில்லை. அதனால் அவரின் வருகை பற்றிய விடயம் தூதரகத்துக்குத் தெரியப்படுத்தப்படாமல் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

கட்டுநாயக்காவில் விசேட பிரதிநிதிகளுக்கான சிறப்புப் பயணவழி ஊடாக வந்த அவர் கொழும்புக்கு வந்து ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து விட்டு, அந்தக் கையோடே கட்டுநாயக்கா திரும்பி, புதுடில்லி பறந்தார் என்றும் கூறப்பட்டது.

கொழும்பில் இரு அரசுத் தலைவர்களோடும் அவர் பேசிய விடயங்கள் குறித்து ஏதும் தெரியவில்லை. பிரதமர் மோடியில் விசேட செய்தி எதனையும் அவர் எடுத்து வந்து, கொழும்பில் தலைவர்களிடம் அவர் கையளித்திருக்க கூடும் என ஊகிக்கப்பட்டது. (உ)

## இன்றைய கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளும்போது மிகவும் கவனமாகவும் சட்ட திட்டங்களை முழுமையாகப் பேணியும் நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி ஜயசுந்தரவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

எவரேனும் ஒரு நபரைக் கைது செய்யும் நடவடிக்கை இடம்பெற வேண்டியது அந்தப் பொறுப்பை நிறைவேற்றும் அதிகாரியின் தொழில்சார் தீர்ப்பின் அடிப்படையிலாகும் என்றும் அந்தக் கடமை சுயாதீனமாகவும் எவ்வித பயமுறுத்தல் அல்லது அனுசரணையின்றி இடம்பெறுவதை உறுதி செய்து கொள்ளுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்ற மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மருத்துவர்கள் போன்ற தொழில்வல்லுநர்கள் தொடர்பில் மேற்படி கடமையை நிறைவேற்றும் போது பொலிஸ் அதிகாரிகளினால் கைது செய்யப்படும் நபருக்கு உரிய மரியாதை வழங்கப்படவேண்டும்.

மேலும் இந்த அறிவுறுத்தல்கள் அனைத்து இலங்கைக் குடிமக்கள் தொடர்பிலும் எவ்வித வேறுபாடுகளுமின்றி ஏற்புடையதாகும் என்றும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளி நோக்கங்களுக்காகச் செயற்படக் கூடாது என்றும் எவ்வித தேவையற்ற அழுத்தங்களுக்கும் அடிபணிய வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தூரநோக்குடன் உரிய முறையில் கடமையை நிறைவேற்றுமாறும் தேவையானபோது சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பேரில் செயற்படுமாறும் ஜனாதிபதியின் செயலாளரினால் பதில் பொலிஸ் மா அதிபர் சீ.டீ விக்ரமரத்னவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது – என்றுள்ளது. (ஐ)

## ரஞ்சன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுகேகொடை நீதிமன்றின் பிடியாணை உத்தரவுக்கு அமைய நேற்று மாலை 6 மணியளவில் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்கு விசாரணை தொடர்பில் நீதிபதியுடன் தொலைபேசியில் உரையாடியதன் மூலம் நீதித்துறையில் தலையீடு செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரைக் கைது செய்து நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்துமாறு கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸாருக்கு சட்ட மா அதிபர் நேற்றுப் பிற்பகல் பணிப்புரை வழங்கியிருந்தார்.

அதனடிப்படையில் நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் பிடியாணை உத்தரவைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை அவரது நாடாளுமன்ற உறுப்பினருக்கான இல்லத்தில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸார் நேற்று மாலை கைது செய்தனர். (ஐ)

## தோட்டத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சரவைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதனுடன் இணைந்ததாக உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட தோட்டத் துறையின் அனைத்துப் பகுதிகளையும் துரிதமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

தேயிலை தொழிற்துறையின் தரத்தையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள வரி விலக்கு, உர மானியம் உள்ளிட்ட பல்வேறு நிவாரணங்கள் அதில் உள்ளடங்கும்.

இந்த நிவாரணங்கள் பெருந்தோட்ட கம்பனிகளுக்கே கிடைப்பதால் அதன் நன்மைகளை தோட்டத் தொழிலாளர்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

உற்பத்தி மற்றும் கைத்தொழிற்துறை அடையும் முன்னேற்றத்துடன் இணைந்ததாக அதன் நன்மைகள் தொழிலாளர்களுக்கும் கிடைக்கச் செய்வது அரசின் எதிர்பார்ப்பாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார் – என்றுள்ளது. (ஐ)

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## பொங்கி மகிழுமா தமிழர் மனம்?

இன்று பொங்கல் பெருநாள்.

அகில நாயகன் ஆதவனை, பூமி மக்கள் ஏற்றிப் போற்றித் துதித்து நன்றியை வெளிப்படுத்தும் திருநாள்.

அவனியின் நாயகன் அவனே. அவனின்றி அணுவும் அசையாது; அவனியும் இயங்காது.

உயிர்ப்பின் மூலமும், உயிரினத்தின் இயக்கமும் அவனிலிருந்து வந்தவைதான். அவனே யாவற்றுக்கும் மூலகாரணம்.

அணுவில் இருந்து அண்டம் வரை அனைத்துக்கும் உயிரும், இயக்கமும் தருபவன் அவனே. அவன் மட்டுமே.

காலங்கள் மாறுவதும், பருவநிலைகள் ஏற்படுவதும், ஏன் இரவு, பகல் மாறுவதும் கூட அவனால்தான்.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த இந்துக்கள் இந்த உண்மையை உணர்ந்தமையால் எழுந்ததே பொங்கல் திருநாள்.

தன் பொற்கிரணங்களைப் பூமிப் பந்தெங்கும் பரப்பி, நானிலத்தைச் செழுமைப்படுத்தும் நாயகன் வெய்யோனே.

கதிரவன் தனது கதிர்கள் மூலமும் பூமிப்பந்தெங்கும் தன் சக்தியை வாரி இறைக்கின்றான். இது சதா காலமும் காலகதி பிசகாமல் – மங்கிக் குறையாமல் – தொடர்ந்து பிரகாசமாய் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

இப்படி வெய்யோன் வாரி வழங்கும் சக்தியைப் பூமிப் பந்தில் பதிப்பவை தாவரங்கள்.

உணவுச் சங்கிலியின் தோற்றுவாய் இப்படி ஆதவனிலிருந்து ஆரம்பிக்கின்றது.

தங்குதடையின்றி – காலகதி பிசகாசமல் – காலைக் கதிரவனின் கதிர் மூலம் பூமிப் பந்தெங்கனும் பதிப்பிக்கப்படும் சக்தியே உலகின் இயக்கத்துக்கு மூலமாகின்றது.

இவ்வாறு தாவரங்கள் மூலம் உலகெங்கும் பதிக்கப்படும் சக்தியே மனிதன் உட்பட உலகின் சகல ஜீவராசிகளுக்கும் உணவூட்டும் போசனையாகவும் மாறுகின்றது.

இப்படி சூரிய சக்தி வயலில் கதிர்களாகப் பதிக்கப்பட்டு நமக்கு விளைச்சல் கிட்டுகின்றது.

அவ்வாறு விளைச்சலின் முதல் தினத்தில், அதற்கு மூலகாரணமாக அமைந்த சூரியனுக்கு, நன்றி தெரிவிக்கும் விதத்தில் பொங்கலிட்டு முதல் படையல் செய்யும் திருநாளே தைப்பொங்கல்.

தமிழேருழவன் தன் வயலில் கிடைத்த முதல் விளைச்சலை சூரியனுக்கு நன்றி தெரிவிக்கப் பொங்கலிட்டுப், படையலிட்டுப் போற்றி மகிழந்தான். ஆதவனை அவன் துதிக்கும் அத்திருநாளே பொங்கல்.

அதுவே தமிழர் தம் வருடத்தின் முதல் நாள் என்றும் கொள்வர்.

நம் பூமிப் பந்து தன்னைத் தானே சுற்றுவதால் பகல், இரவு நேருகின்றது.

அது சூரியனைச் சுற்றி வருகின்றமையால் பருவ காலங்கள், காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன.

அந்தச் சுற்றலில் புதிய அத்தியாயம் – ஆரம்பம் – மீளப் பிறக்கின்றமையைச் சுட்டி நிற்பதே பொங்கல் பண்டிகையாகும்.

தமிழர்களின் வான சாஸ்திரக் கணக்குப்படி, தனு ராசியில் இருந்து சூரியன் மகரராசிக்குள் பிரவேசிப்பது இத்தினத்தில்தான். இதனால் இது மகரசங்கராந்தி எனவும், மகரத் திருநாளாகவும், தமிழர் பண்டிகையாகவும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

உத்தராயண ஆரம்பம் என்பதும் இதைத்தான்.

வழமையாக, அகில நாயகனை – உலக காரணனை – அணுவில் இருந்து அண்டம் வரை உயிரூட்டும் உத்தமனை – போற்றிப் பொங்கலிட்டு அவனுக்கு நன்றி கூறும் இந்த நாள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் தரும் திருநாள் தான். அதனை 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற நம்பிக்கையுடன்தான் கொண்டாடி மகிழ வேண்டும்.

ஆனால், இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை அப்படி ஏற்றிப் போற்றி மகிழும் பொங்கலாக இது இல்லை என்பதே நிதசர்னம்.

அத்தகைய நம்பிக்கையை ஏற்படுத்தும் – மனதைப் பொங்க வைக்கும் – திருநாள் ஏதும் கிட்டத்தில் இல்லை என்பதுதான் தமிழர்களின் யதார்த்தப் புறச்சூழல் அவர்களுக்கு உணர்த்தி நிற்கும் உண்மை.

நீதி கேட்டு, நியாயம் கோரி, கௌரவ வாழ்வு வேண்டி, சமத்துவ நிலை தேடி, சுதந்திர தாகத்தோடு முதல் மூன்று தசாப்தங்கள் அஹிம்சை வழியிலும் அடுத்த மூன்று தசாப்தங்கள் ஆயுத வழியிலும், அதன் பின்னரை கடந்த ஒரு தசாப்தமாக வெறும் வாக்குச் சீட்டுப் பிரயோக மார்க்கத்தில் மட்டும் நின்றும் தமிழர்கள் நடத்திய முயற்சிகள் யாவும் அவமாகிப் போய் விட்ட நிலையில் இன்று அவர்கள் தம் தாயக மண்ணிலேயே அநாதரவாக நிற்கும் அவலம் நேர்ந்திருக்கின்றது.

தோல்விகளிலும், பின்னடைவுகளிலும், அழிவுகளிலும், ஏமாற்றங்களிலும் சிக்குண்ட தமிழன் இன்று எதிர்ப்புறத்தில் பேரெழுச்சியாக விஸ்வரூபம் எடுத்து நிற்கும் பேரினவாத அரக்கன் என்ற பெரும் பூதத்தைப் பார்த்து அஞ்சி, அவஸ்தைப்பட்டு, அடங்கி நிற்கும் கொடூரம் நேர்ந்திருக்கின்றது.

சாம்பல் மேட்டிலிருந்து மீள உயிர்க்கும் பீனிக்ஸ் பறவை போல எழுந்து நிற்பதன் மூலமே இந்தப் பின்னடைவு நிலையிலிருந்து தமிழினம் மீள முடியும்.

அதற்கான புதிய நம்பிக்கையையும் – புதிய தெம்பையும் – அறிவும் பற்றுறுதியும், திடசங்கற்பமும், உண்மையும், வாண்மையும் மிக்க தலைமைத்துவ வழிகாட்டலையும் – தமிழினம் பெற இந்தத் தைத்திங்களில் பிறக்கும் தமிழர் புதுவருடம் பெற்றுத் தரும் எனப் பிரார்த்திப்போம்.

# நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் பொங்கல்







முல்லைத்தீவு, ஜன. 15

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுத் தமிழர் திருநாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.

தைப்பொங்கலை முன்னிட்டு, தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டிடமான நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் நேற்று, பொங்கல் நிகழ்வும் இடம்பெற்றது

காலை 8.30 மணிக்கு தலமூர்த்திகளுக்கான அபிசேகத்துடன் பொங்கல் நிகழ்வுகள் ஆரம்பித்தன.

நிகழ்வை முன்னிட்டு அங்கு நூற்றிற்கும் அதிகமான பொலிஸார் நிறுத்தப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

ஒலிபெருக்கிப் பாவனைக்கு ஆரம்பத்தில் அனுமதி மறுத்திருந்தபோதும், பின்னர் பொலிஸார் அனுமதியளித்திருந்தனர்.

அங்கு நூற்றுக்கணக்கான பொலிஸார் மற்றும் அரச புலனாய்வாளர்கள் ஆலயச் சூழலில் குவிக்கப்பட்டு பொங்கல் நிகழ்வுகளையும் பங்கு கொள்ளும் மக்களையும் புகைப்படம் மற்றும் காணொளிப் பதிவு மேற்கொண்டனர்.

அத்தோடு தென்பகுதியிலிருந்து பௌத்த துறவிகள் அடங்கிய குழுவினரும் ஆலயப் பகுதிக்கு வருகை தந்துள்ளனர். (ஐ)

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு அவகாசம்



கொழும்பு, ஜன. 15

அனுமதிப்பத்திரமின்றிச் சட்டத்துக்குப் புறம்பாக ஆயுதங்களை அரசிடம் ஒப்படைப்பதற்காகப் பொது மன்னிப்புக் காலம் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது பிரதேச செயலக அலுவலகங்களில் இவ்வாறு ஆயுதங்களை ஒப்படைக்க முடியும் என பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இவ்வாறு அனுமதிப் பத்திரம் அற்ற ஆயுதங்களை ஒப்படைக்கும் பொது மன்னிப்பு காலம் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இராணுவத்தில் இருந்து சட்டவிரோதமான முறையில் விலகிய நபர்களுக்கு மீண்டும் சேவையில் இணைவதற்கு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை பாதுகாப்பு அமைச்சால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)




# யாழ். மாநகர் மத்தியில் நேற்று பௌத்த கொடி

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ்ப்பாணம் மாநகரின் மத்தியில் பௌத்த கொடி ஒன்று கட்டப்பட்டு அதற்கு மலர் வைத்தது மனநலம் குன்றிய நபர் என அறியப்பட்டதையடுத்து மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் அந்தக் கொடி அந்தப் பகுதியிலிருந்து அகற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் நகரில் வழமையாக உலாவும் மனநலம் குன்றிய ஒருவர் நேற்று அதிகாலைவேளை அந்தப் பகுதியில் உள்ள கற்களைச்சேர்த்து குவித்து பௌத்த கொடியை அதில் கட்டுவதை தாங்கள் கண்டனர் என வர்த்தகர் சிலர் தெரிவித்தனர்.

யாழ்.மத்திய பஸ் நிலையம் முன்பாக வீதியின் நடுவே கற்கள் மற்றும் இரும்புக் குழாய்கள் கொண்டு வந்து போடப்பட்டு அதன் மீது பௌத்த கொடி ஒன்று கட்டப்பட்டு மலர் சூட்டப்பட்டிருந்தது. அதனால் நேற்றுச் சர்ச்சை எழுந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

**நாளை 16.01.2020 - வியாழக்கிழமை**

நட்சத்திரம்: உத்தரம் காலை 8.03 வரை
திதி : ஷஷ்டி பி.ப 1.44 வரை
இராகுகாலம் : 2.04 – 3.34
சுப நேரம் : 8.04 – 9.34

# வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பினார் ராஜித!

கொழும்பு, ஜன. 15

தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளார்.

அதற்கமைய கொழும்பு – நாரஹேன்பிட்டி பகுதியிலுள்ள தனியார் வைத்தியசாலையிலிருந்து அவர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு வெளியேறினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை எதிர்வரும் 17ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

வெள்ளை வான் ஊடக சந்திப்பு தொடர்பாக நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைக்கமைய கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பு பிரதம நீதவானால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்தப் பிணை உத்தரவில் குறைபாடு உள்ளதாகவும் எனவே அதனைச் செல்லுபடியற்றதாக்குமாறும் கோரி, சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மீள் திருத்த விண்ணப்பத்தை எதிர்வரும் 17 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.



அதற்கமைய, அந்த மனுவின் எதிர்மனுதாரர்களுள் ஒருவரான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை அந்த தினத்தில் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொழும்பு பல்கலை மாணவர் நேற்றுப் பிணையில் விடுதலை

கொழும்பு, ஜன. 15

கொழும்பு பல்கலைக் கழகத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட மாணவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கொழும்பு நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பகிடிவதையை அடிப்படையாகக் கொண்டு, கொழும்பு பல்கலைக் கழக சிற்றுண்டிச்சாலையில் கடந்த 7 ஆம் திகதி மாலை மோதல் ஏற்பட்டது.

பல்கலைக்கழகத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் சிலர், முதலாம் வருட மாணவர்களைப் பல்கலைக் கழகத்துக்குள்ளும் பொரளையிலுள்ள மாணவர் விடுதியிலும் வைத்து கடந்த சில தினங்களாகப் பகிடிவதைக்கு உட்படுத்தினர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த இரண்டாம் வருட மாணவரொருவர் தாக்கப்பட்டிருந்தார். இதில் காயமடைந்த மாணவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.15

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை வியாக்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

மருதனார்மடம், றொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பெரிய மதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் – யாழ் நுண்கலைப்பீடம், கொழும்புத்துறை ஒரு பகுதி, நெடுங்குளம், ஒரு பகுதி, உதயபுரம், மணியம்தோடட் ம், மணியம்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில்-**

சூடுவெந்தபுலவு, அவுசதப்பிட்டிய கிராமம், சாளம்பைக்குளம், ஈரபெ பரியகுளத்திலிருந்து புஓயா வரை, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம், பூ ஓயா இராஙுவ முகாம், Recobo North ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில்-**

சிலாவத்துறை, அரிப்பு, முள்ளிக்குளம், சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## இலங்கையுடன் ராஜதந்திர உறவை வலுப்படுத்த ஜப்பான் நடவடிக்கை

கொழும்பு, ஜன. 15

இலங்கையுடனான நீண்ட கால இராஜதந்திர உறவை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக, வலய மறுசீரமைப்பு தொடர்பான ஜப்பா னின் இராஜாங்க அமைச்சர் கொசோயமமொதோ குறிப் பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவை, ஜனாதிபதி செயலகத் தில் நேற்றுமுன்தினம் திங் கட்கிழமை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசின் கீழ் இலங்கையின் பாதுகாப்பு உறு திப்படுத்தப்பட்டுள்ளதுடன், பொருளாதாரமும் முன்னேற்ற மடைந்து வருகின்றது. இதனால் ஜப்பானிய வர்த்தகர்களுக்கு இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சிறந்த பின்னணி உருவாகியுள்ளதென ஜப்பானின் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு, அடிப்படை வசதிகள், கைத்தொழில் மற்றும் வேறு துறைகளில் ஜப்பான் பெற்றுள்ள அனுபவங்கள் மூலம் இலங்கைக்கு ஒத்து ழைப்பு வழங்க முடியும் என வலய மறு சீரமைப்பு தொடர்பான ஜப்பானின் இராஜாங்க அமைச் சர் ஜனாதிபதியிடம் கூறினார்.

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் நிலவிய 7 சதவீத பொருளாதார வளர்ச்சி வீதம் தற்போது வீழ்ச்சியடைந் துள்ளமையை ஜனாதிபதி ஜப் பானிய இராஜாங்க அமைச்ச ருக்குத் தெளிவுபடுத்தியதுடன், அதனைக் கட்டியெழுப்புவதே தான் எதிர்நோக்கியுள்ள முதன்மை சவாலாகும் என்றும் தெரிவித்தார்.

உயர் தொழில்நுட்பத்துட னான கைத்தொழில் துறைக ளில் முதலீட்டு வாய்ப்புகளை நாட்டுக்குப் பெற்றுத்தருமாறு ஜனாதிபதி ஜப்பான் அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து ஜப்பானிய வர்த்தக சமூகத்தின் மத்தியில் இலங்கையின் நன்மதிப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுப் பதாக ஜனாதிபதியின் வேண்டு கோளை ஏற்றுக்கொண்ட ஜப்பானிய இராஜாங்க அமைச் சர் கொசோயமமோடோ தெரிவித்தார். (ஐ)

## சயந்தனின் அலுவலகம் முன் நேற்று ஆட்லறி செல்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

சாவகச்சேரி நகர் குடிதண்ணீர்க் குழாய் பொருத்துவதற்காக வெட்டப்பட்ட குழியில் இருந்து ஆட்லறி ஷெல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தனின் அலுவலகம் முன்பாக இந்த குழி வெட்டப்பட்ட நிலையில் வெடிபொருள்கள் காணப்பட்டுள்ளன.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குப் பொலிஸார் அழைக்கப்பட்டு ஷெல்களை மீட்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழியில் மேலும் ஷெல்கள் இருக்கும் என நம்பப்படும் நிலையில் தொடர்ந்து அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ – 07)

## ஐ.தே.கவில் மேலும் மூவர் விரைவில் நீக்கப்படுவராம்!

கொழும்பு, ஜன. 15

கட்சிக்கு களங்கம் ஏற்படுத்தியமைக்காக ரஞ்சன் ராமநாயக்கவை விட மேலும் மூவரை ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்து இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கட்சியின் பிரதித்தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் கட்சி உறுப்புரிமையை தற்காலிகமாக இடைநிறுத்த ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதை அடுத்து இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அந்தவகையில் கட்சியின் மூத்த தலைமை தொடர்பான விமர்சனம் மற்றும் கட்சிக்குக் களங்கம் ஏற்படுத்திய மூவரை கட்சி அடையாளம் கண்டுகொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன்பிரகாரம் ரஞ்சன் ராமநாயக்க போன்றே அவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அவர்களை கட்சியில் இருந்து இடைநீக்கவேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளதாகவும் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டார். (ஐ)



# 150 கோடி ரூபாய் வசூலித்து ரஜினியின் ‘தர்பார்’ சாதனை




சென்னை,ஜன.15

150 கோடி ரூபாய் இந்தியப் பணப் பெறுமதி வசூலித்து தர்பார் படம் சாதனை படைத்துள்ளது எனத் தயாரிப்பு நிறுவனம் அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டு உள்ளது.

ரஜினிகாந்த் - ஏ.ஆர்.முருகதாஸ் கூட்டணியில் வெளியாகியுள்ள படம் தர்பார். தர்பார் உலகம் முழுவதும் 7000 திரைகளில் வெளியிடப்பட்டு உள்ளது.

ரஜினிகாந்த் காவல்துறை அதிகாரியாக நடித்திருக்கும் இந்தப் படத்தில் நயன்தாரா அவருக்கு ஜோடியாக நடித்துள்ளார். லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படம் ரசிகர்களிடம் வரவேற்பு பெற்று வெற்றிகரமாக திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கிறது.

ரஜினிகாந்தின் தர்பார் உலகளாவிய பாக்ஸ் ஆபிஸில் நல்ல தொடக்கத்தை தந்து உள்ளது. உலக் பாக்ஸ் ஆபீஸில் 150 கோடி ரூபாய் வசூலித்து தர்பார் படம் சாதனை படைத்துள்ளது என தயாரிப்பு நிறுவனம் அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டு உள்ளது.

# சென்னையில் கடும் புகை மூட்டத்தால் முதல்வரின் விமானமும் கூடத் தாமதம்

சென்னை,ஜன.15

சென்னையில் கடும் புகை மூட்டம்



காரணமாக 20 விமானங்கள் ஒரு மணி நேரம் தாமதமாகத் தரையிறக்கப்பட்டன.

சென்னையில் போகி பண்டிகை கொண்டாடப்படுவதை ஒட்டி பல்வேறு இடங்களில் காற்று மாசு அதிகரித்துள்ளது. சென்னையில் கடும் புகை மூட்டம் காரணமாக 20 விமானங்கள் ஒரு மணி நேரம் தாமதமாக தரையிறக்கப்பட்டுள்ளன. டெல்லி, ஐதராபாத், மும்பை உள்ளிட்ட நகரங்களுக்கு செல்லும் 15க்கும் மேற்பட்ட விமானங்களும் தாமதமாக புறப்பட்டன.

மூடுபனி, புகைமூட்டம் காரணமாக முதல்வர் பழனிசாமி சேலம் செல்லும் விமானம் ஒன்றரை மணிநேரம் தாமதமாகவே புறப்பட்டது.

# அமெ. அதிபர் டொனால்ட் டிரம்ப் அடுத்த மாதம் இந்தியா வருவார்!



அமெரிக்க அதிபர் டொனல்ட் டிரம்ப் அடுத்த மாதம் மத்தியிலோ அல்லது இறுதியிலோ இந்தியா வர இருக்கிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அவரது இந்திய வருகைக்கான திகதி குறித்து, இருநாடுகளின் அதிகாரிகளும் ஆலோசனை நடத்துகின்றனர் எனவும் சொல்லப்படுகிறது. கடந்தாண்டு குடியரசுத் தின விழாவில் பங்கேற்க அமெரிக்க அதிபர் டொனல்ட் டிரம்புக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், தொடர் நிகழ்ச்சிகளால் அமெரிக்க அதிபரால் பங்கேற்க இயலவில்லை என வெள்ளை மாளிகை பின்னர் கூறியது. இந்நிலையில், அமெரிக்க அதிபர் டிரம்பை பதவியிலிருந்து நீக்க கோரும் பிரேரணை விரைவில் அமெரிக்க செனட் சபையில் தாக்கலாகி வாக்கெடுப்புக்கு வர உள்ள நிலையில் அவரது இந்தியப் பயணம் குறித்த திட்டமிடல் பற்றித் தகவல் வெளியாகியிருக்கிறது.

தாம் அதிபராக பதவியேற்ற பின்னர் டிரம்ப் ஒரு முறை கூட இந்தியா வரவில்லை என்கிற நிலையில் தற்போது அவரது வருகைக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

# போகி கொண்டாட்டத்தால் சென்னை பெரும் புகை மண்டலத்தில் மூழ்கியது!




சாலையில் வாகனங்கள் தெரியாத அளவுக்கு சூழ்ந்திருந்த புகை மூட்டம்.

சென்னை,ஜன.15

சென்னையில் போகிப் பண்டிகையை முன்னிட்டு பழைய பொருள்களுடன் பிளாஸ்டிக் பொருள்களையும் ஆங்காங்கே எரித்ததால் காற்று மாசு அதிகரித்துள்ளது.

மார்கழி மாதத்தின் இறுதி நாளான நேற்று போகி பண்டிகையை தமிழகம் முழுவதும் மக்கள் உற்சாகமாக கொண்டாடினர். பொங்கல் பண்டிகைக்காக வீட்டைச்சுத்தம்செய்யும்போது, வீட்டில் இருக்கும் தேவையற்ற பொருள்களை அப்புறப்படுத்தி தீயிட்டு கொளுத்துகின்றனர். பொருள்களை எரித்து, மேளம் அடித்து சிறுவர்கள் உற்சாகமாகக் கொண்டாடினர்.

அதிகாலையில் பழைய பொருள்களை ஆங்காங்கே சேகரித்து எரித்தமையால் கடும் புகை மூட்டம் ஏற்பட்டது. பனி மூட்டத்துடன் இந்தப் புகையும் சேர்ந்ததால் காற்று மாசுபாடு அதிகரித்துள்ளது. காலையில் விடிந்து வெகுநேரமாகியும் எதிரே வாகனங்கள் செல்வது கூடத் தெரியாத அளவிற்கு பனிமூட்டம் மற்றும் புகை மூட்டம் சூழ்ந்திருந்தது.

போகி கொண்டாட்டம்

தலைநகர் சென்னையில் அதிகாலை முதலே தேவையற்ற பொருள்களை பொதுமக்கள் சாலையோரம் குவித்து எரித்தமையால் கடும் புகை மூட்டம் எழுந்தது. அரசு அறிவுறுத்தலையும் மீறி பல்வேறு இடங்களில் டயர்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருள்களை எரித்ததால் நச்சுவாயுவுடன் கடுமையான புகைமூட்டம் எழுந்தது. இதனால் காற்று மாசுபாடு அதிகரித்தது. மணலி, ஆலந்தூர், அண்ணாசாலை, வேளச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு காற்று மாசு காணப்பட்டது.

புகை மூட்டம் காரணமாக சென்னை முழுவதும் சாலையே தெரியாத அளவுக்கு புகை சூழ்ந்தது. இதனால் வாகன ஓட்டிகள் கடும் அவதிப்பட்டனர். முகப்பு விளக்குகளை எரியவிட்டபடி, மிகவும் எச்சரிக்கையுடன் மெதுவாக பயணித்தனர்.

# ஒடிசாவில் குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்த மலைப்பாம்புகளை மீட்ட வனத்துறையினர்!

ஒடிசா, ஜன.15

ஒடிசாவில் குடியிருப்பு பகுதியில் நுழைந்த பாம்புகளைக் கண்டு வனத்துறையினரே ஆச்சரியப்பட்டனர்.

தென்கனல் மாவட்டத்தில் சப்தசஜ்யா என்ற ஊருக்குள் பாம்புகள் நுழைந்துள்ளன எனக் கிராம மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து அங்கு சென்ற வனத்துறையினர் காங்கிரீட் குழாய்களுக்குள் இருந்த 5 மலைப்பாம்புகளை மீட்டனர். மற்றொரு குழாயை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் உடைத்து உள்ளே பதுங்கியிருந்த பிரமாண்டமான மலைப் பாம்பை வனத்துறையினர் பிடித்தனர். அப்போதுதான் இறுதியாகப் பிடிக்கப்பட்ட பாம்பு சுமார் 18 அடி நீளம் இருந்தது தெரியவந்தது.

பிடிபட்ட அனைத்துப் பாம்புகளும் குமுர்தங்கார் வனப்பகுதியில் விடுவிக்கப்பட்டன. பாம்புகள் பிடிக்கப்பட்டமையை வனத்துறை அதிகாரியான சுசந்தா நந்தா தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



# டிரோன்களுக்கு வருகிறது கட்டுப்பாடு..!

ஆளில்லா குட்டி விமானம் எனப்படும் டிரோன்களை வைத்திருப்பவர்கள் அவற்றை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரசிடம் பதிவு செய்யாவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் எச்சரித்துள்ளது.

பொழுதுபோக்கு, வீடியோ - திரைப்பட பதிவு உள்ளிட்டவற்றுக்கு டிரோன்கள் பெருமளவில் பயன்படுத்தப்படும் நிலையில், அவற்றால் பாதுகாப்பு மற்றும் விமானப் போக்குவரத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அரசு கருதுகிறது.

விமானப் போக்குவரத்து விதிமுறைகளுக்கு மாற்றமாக இயக்கப்படுவதால் அவற்றை ஒழுங்குபடுத்தும் நோக்கில் டிரோன்களை பதிவு செய்வதைக் கட்டாயமாக்கி இந்திய அரசு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதன்படி டிரோன்களை வைத்திருப்பவர்கள் அவை குறித்தும் உரிமையாளர் குறித்தும் ஒன்லைனில் பதிவு செய்ய வேண்டும். அவர்களுக்கு டிரோன்களுக்கான தனித்துவ அடையாள எண், ஆளில்லா விமானம் பறக்கும் உரிமம் ஆகியன வழங்கப்படும்.



இவற்றை விமானப்போக்குவரத்து அமைச்சகத்தின் டிஜிஸ்கை (DigiSky) மென்பொருள் வாயிலாகப் பெற்று டிரோன்களை இயக்கிக் கொள்ளலாம்.

கடந்த டிசம்பரில் பிரிட்டனின் கேட்விக் (Gatwick) விமான நிலையத்தின் மீது ஏராளமான டிரோன்கள் பறந்தன. அதனால் விமானங்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலை உருவாகி விமான நிலையம் 3 நாள்கள் மூடப்பட்டு, ஆயிரத்திற்கும் மேற்பட்ட விமான சேவைகள் ரத்தாயின.

அது போன்ற நிலை ஏற்படாமல் இருக்க டிரோன்கள் மீதான கட்டுப்பாடு இறுக்கப்படுகிறது. இந்தியாவில் 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரையிலான டிரோன்கள் சட்டவிரோதமாக இயக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது.





# பிலிப்பீன்ஸில் குமுறுகிறது எரிமலை ஐம்பதாயிரம் மக்கள் வெளியேற்றம்

மணிலா,ஜன.15

பிலிப்பீன்ஸில் எரிமலை குமுறல் காரணமாக, 50 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பிலிப்பீன்ஸ் பல தீவு கூட்டங்களை உள்ளடக்கிய நாடாகும். நிலநடுக்கம் போன்ற இயற்கை சீற்றங்களால் அடிக்கடி பாதிக்கப்படும் இந்த நாட்டில், பல எரிமலைகளும் உள்ளன. அதில் குறிப்பிடத்தக்க பெரிய எரிமலைகளில் லூசன் தீவில் உள்ள தால் எரிமலையும் ஒன்று. தலைநகர் மணிலாவில் இருந்து தெற்கே 66 கி.மீ. தொலைவில் ஏரியின் நடுவே அமைந்துள்ள அந்த எரிமலை நேற்று முன்தினமந்திடீரெனக் குமுறத் தொடங்கியது. அதில் இருந்து லார்வா குழம்பு வெளியேறியதால், ஏற்பட்ட கரும்புகை வானுயர எழுந்தது.

அந்த எரிமலை சில மணிநேரத்தில் அல்லது சில நாள்களில் வெடித்துச் சிதறலாம் என்று அந்த நாட்டு அரசு அறிவித்து உள்ளது. மேலும் நிலநடுக்க எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்த எரிமலையைச் சுற்றி அமைந்துள்ள 8 ஆயிரம் கிராமங்களில் வசிக்கும் 50 ஆயிரம் மக்களை உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அரசு தெரிவித்துள்ளது. இதையொட்டி சர்வதேச விமான நிலையமும் மூடப்பட்டது. இதனால் 240 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. பள்ளி, கல்லூரி, அரசு அலுவலகங்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுவிட்டார்களா? என்று கண்காணிக்கும் பணியில் வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வீடுகளை விட்டு வெளியேறாமல் இருப்பவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது. 1911 ஆம் ஆண்டு தால் எரிமலை வெடித்து சிதறியதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. கடைசியாக 1977 ஆம் ஆண்டு அந்த எரிமலை வெடித்தது. 43 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது மீண்டும் தால் எரிமலை வெடிக்கத் தொடங்கி இருக்கிறது.

# மத்திய கிழக்குப் பதற்றத்துக்கும் மத்தியில் ஈரான் – கட்டார் தலைவர்கள் ஆலோசனை

தெஹ்ரான்,ஜன.15

அமெரிக்காமற்றும்ஈரான் இடையே பதற்றமான சூழல் நிலவி வரும் வேளையில் ஈரான் அதிபர் ஹசன் ரெஹானியை கட்டார் இளவரசர் சந்தித்து பேசினார்.



பரம எதிரிகளாக இருந்து வரும் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே கடந்த ஒரு வாரமாக பதற்றமான சூழல் நிலவி வருகிறது. சமீபத்தில் ஈரான் தளபதி காசிம் சுலைமானியை அமெரிக்கா ஆளில்லா விமானம் மூலம் ஏவுகணை வீசிக் கொன்றது. இந்தச் செயலுக்குத் தக்க பதிலடி தரும் விதமாக ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களை ஈரான் ஏவுகணைகள் வீசி தாக்கியது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர்ப் பதற்றம் உருவானது.

இதற்கிடையே உக்ரைன் நாட்டுக்குச் சென்ற விமானத்தை ஈரான் தவறுதலாக ஏவுகணை வீசித் தாக்கியதில் விமானத்தில் பயணித்த 176 பேரும் பரிதாபமாக உயிர் இழந்தனர். இதில் உயிர் இழந்தவர்களில் பெரும்பாலானோர் ஈரான் மற்றும் கனடா நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவர். இந்தச் சம்பவத்தால் உலக நாடுகளின் எதிர்ப்பையும் ஈரான் பெற்றது. ஈரானின் செயலுக்கு இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, உக்ரைன் உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்தன.

குறிப்பாக விமானத்தை தாக்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஈரான் மக்களே அந்நாட்டு அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டத்துக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்து உள்ளது. சொந்த நாட்டு மக்களே ஈரானுக்கு எதிராக போராடிவருவது அந்நாட்டுக்கு மேலும் பின்னடைவை உருவாக்கி உள்ளது.

இத்தகைய பதற்றம் மிகுந்த சூழலில் ஈரான் அதிபர் ஹசன் ரெஹானியை கட்டார் இளவரசர் ஷெய்க் தமீம் பின்ஹமாத்அல்தானி சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின்போது அமெரிக்கா – ஈரான் இடையே நிலவும் பதற்றத்தை போக்குவது குறித்து இருவரும் பேச்சு நடத்தினர். அப்போது அமெரிக்காவுடன் நிலவும் மோதல் போக்கைஇ கைவிட பேச்சே தீர்வு என்று கட்டார் இளவரசர் கூறினார்.

இது குறித்து கட்டார் இளவரசர் கூறுகையில், நெருக்கடியான சூழலுக்கு மத்தியில் என்னுடைய இந்த பயணம் அமைந்து இருக்கிறது. தற்போது ஈரானில் நிலவும் பிரச்சினைகளுக்கு பேச்சே ஒரே தீர்வாக அமையும் என்றார்.

இந்தச் சந்திப்புக்கு பின்னர் ஈரானின் அதிகார தலைவர் அயத்துல்லா அலி காமேனியையும் கட்டார் இளவரசர் சந்தித்தார்.

இந்த சந்திப்பு குறித்து காமேனி தனது அதிகாரப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில் கூறுகையில் –

ஊழல் நிறைந்த அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளால் இந்தப் பிராந்தியத்தில் கொந்தளிப்பான சூழல் நிலவுகிறது. இதனை எதிர்கொள்வதற்கு ஒரே தீர்வு, பிராந்தியத்திலுள்ள அனைத்து நாடுகளும் ஒத்துழைப்புடன் இருக்க வேண்டும். பதற்றமான சூழலில் கட்டார் இளவரசரின் இந்தப்பயணம் அரிதான ஒன்றாகும். – என்று பதிவிட்டு உள்ளார்.

அமெரிக்காவை எதிர்கொள்ள மத்திய கிழக்கு நாடுகள் ஒத்துழைப்புடன் இருக்க வேண்டும் என்று காமேனி கூறி இருப்பது தற்போது நிலவும் பிரச்சினையை மேலும் வலுவடைய செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 21 வயதுக்குக் குறைந்தோர் செல்போன் பயன்படுத்தத் தடை விதிக்கும் பிரேரணை

## அமெரிக்க செனட்டில் தாக்கலானது

வொஷிங்டன்,ஜன.15

21 வயதுக்கு உட்பட்டவர்கள் செல்போன் பயன்படுத்தத் தடை கோரும் பிரேரணை ஒன்று அமெரிக்க செனட் சபையில் தாக்கல் செய்யப்பட்டது.

அமெரிக்கசெனட்சபையில், வெர்மோன்ட் மாகாணத்தைச் சேர்ந்த ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஜோன் ரோட்ஜர்ஸ் ஒரு பிரேரணையைத் தாக்கல் செய்தார். அதில், 21 வயதுக்கு உட்பட்டவர்கள் செல்போனை சொந்தமாக வைத்திருப்பதையும், பயன்படுத்துவதையும் சட்டவிரோதம் என அறிவிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

செல்போனை பாதுகாப்பாக பயன்படுத்த 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்குப் போதிய முதிர்ச்சி கிடையாது என்றும், செல்போன் மூலம் அவர்கள் பல்வேறு ஆபத்துகளை சந்திக்க நேரிடும் என்றும் மசோதாவில் கூறப்பட்டுள்ளது. இந்த தடையை மீறுவோருக்கு ஓராண்டு வரை சிறைத்தண்டனையும், ரூ.72 ஆயிரம் அபராதமும் விதிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இந்த மசோதா நிறைவேறும் என்று எதிர்பார்க்கவில்லை, ஒரு விழிப்புணர்வுக்காகவே தாக்கல் செய்தேன் என்று செனட் உறுப்பினர் ஜான் ரோட்ஜர்ஸ் தெரிவித்தார்.

# முஷாரப்பின் தூக்குத் தண்டனையை தள்ளுபடி செய்தது உயர்நீதிமன்றம்

## சிறப்பு நீதிமன்று அமைத்ததே அரசமைப்புக்கு விரோதமாம்!

லாகூர்,ஜன.15

தேசத் துரோக வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரப்புக்கு அந்த நாட்டு சிறப்பு நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை லாகூர் உயர்நீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானில் இராணுவத் தளபதியாக இருந்த முஷாரப் 2001 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி நடத்தி நவாஸ் ஷெரிப்பிடம் இருந்து ஆட்சியை கைப்பற்றி அந்நாட்டின் அதிபரானார். 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதி நெருக்கடி நிலையை அறிவித்தார். டிசெம்பர் 15 ஆம் திகதி வரை நெருக்கடி நிலை நடைமுறையில் இருந்தது.

2014 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று நவாஸ் ஷெரிப் மீண்டும் பிரதமராக பதவி ஏற்றதும், தனது ஆட்சியைப் புரட்சி மூலம் கைப்பற்றியதற்காகவும், நெருக்கடி நிலையைக் கொண்டுவந்ததற்காகவும் முஷாரப் மீது தேச துரோக வழக்கு பதிவு செய்தார். 2016 ஆம் ஆண்டு சிகிச்சைக்காக துபாய் சென்ற முஷாரப் பின்னர் நாடு திரும்பவில்லை. விநோத நோயால் பாதிக்கப்பட்டுள்ள அவர் துபாயில் உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில், இஸ்லாமாபாத்தில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்தத் தேசத் துரோக வழக்கை விசாரித்து வந்தது. கடந்த டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி சிறப்பு நீதிமன்றத்தில் முஷாரப்புக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. 2 நீதிபதிகள் இந்தத் தீர்ப்பையும், ஒரு நீதிபதி மாறுபட்ட கருத்தையும் தெரிவித்து இருந்தனர்.

தேசத் துரோக வழக்கில் முஷாரப்புக்கு சிறப்பு நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியதை முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்), மறைந்த முன்னாள்பிரதமர்பெனஸிர்பூட்டோவின்பாகிஸ்தான்மக்கள்கட்சி ஆகியன வரவேற்றிருந்தன.

'இராணுவ தலைமைத் தளபதியாக, அதிபராக 40 ஆண்டுகளாக சேவையாற்றிய, தேசத்தின் பாதுகாப்புக்காக போரிட்ட முஷாரப் ஒருபோதும் நாட்டுக்கு துரோகமிழைத்திருக்க முடியாது. நீதிமன்றம் அவசரகதியில் தீர்ப்பு வழங்கியுள்ளது' என்று பாகிஸ்தான் இராணுவம் கண்டனம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், சிறப்பு நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை ரத்து செய்யக்கோரி லாகூர் உயர்நீதிமன்றத்தில் முஷாரப் மேல்முறையீட்டு மனுத் தாக்கல் செய்தார். இந்த மனு மீது விசாரணை நடத்திய, நீதிபதிகள் சையத் மஜஹர் அலி அக்பர் நக்வி, முகமது அமீர் பட்டி மற்றும் சவுத்ரி மசூத் ஜஹாங்கிர் ஆகியோர் அடங்கிய 3 பேர் கொண்ட அமர்வு, முரப்பிற்கு எதிராக சிறப்பு நீதிமன்றம் அமைப்பது அரசமைப்பிற்கு விரோதமானது என்று ஒருமனதாக அறிவித்து முஷாரப்புக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்துச் செய்து உத்தரவிட்டனர்.



# பொங்கலோ, பொங்கல்!

## இது தமிழர் தம் திருநாள்

தை பிறந்தால் வழிபிறக்கும் என்று தமிழர்கள் சொல்லுவது வழக்கமாகும். புலம் பெயர்ந்த நாட்டினில் வாழுகின்ற எங்களின் பிள்ளைகளுக்கு இந்த மொழியின் அர்த்தம் என்னவென்று தெரியவே மாட்டாது. அவர்கள் தையைப் பற்றியோ அல்லது தையில் வருகின்ற பொங்கலைப் பற்றியோ எண்ணியே பார்ப்பதும் இல்லை. வயது வந்தவர்களான நாங்கள்தான் வருஷா வருஷம் தவறாமல் பொங்கலை பொங்கி வருகின்றோம். நாங்கள் பொங்கலைப் பொங்கி மகிழ்வது முக்கியம்தான். அதே வேளை எங்களின் பிள்ளைகளுக்கும் பொங்கலைப் பற்றி நாங்கள் தெளிவுபடுத்துதலும் முக்கியமானது என்பதை நாங்கள் அனைவரும் மனதில் இருத்துவது மிகவும் அவசியமானதே.

புலம் பெயர்ந்த நாட்டில் வாழுகின்ற பிள்ளைகள் அங்குள்ள சூழலுக்கு ஏற்பவே தங்களை மாற்றிக் கொள்ளுகிறார்கள். அவ்வாறு மாறும் வேளை என்பது மிகவும் முக்கியமானதாகும். உணவில் மாறலாம். உடையில் மாறலாம். உழைப்பில் மாறலாம். ஆனால் உள்ளத்தில் தங்களின் பண்பாடு, கலாசாரம் பற்றிய எண்ணங்களை மட்டும் மாற்றாமல் அவர்கள் இருப்பதுதான் மிகவும் முக்கியமாகும். பண்பாடு, கலாசாரம், இவற்றினை உணர்த்துவதுதான் எங்களின் விழாக்களும், கொண்டாட்டங்களுமாகும். பண்பாட்டினை நிலைநிறுத்தும் மிகவும் முக்கிய நிகழ்வாக அமைவதுதான் தைப்பொங்கல் எனலாம். எங்கள் பிள்ளைகளை உணரச் செய்தாலே பொங்கல் விழாவானது பூரிப்பான தாகிவிடும்.

தைமாதத்தின் தொடக்கத்தில் இந்த விழா ஏன் கொண்டாடப் படுகிறது? இந்த விழாவினை யாரை மையப்படுத்திக் கொண்டாடுகிறோம் ? இந்த விழாவின் அடிப்படை எதனை உணர்த்துகிறது ? இந்த விழாவில் தமிழரின் எத்தகைய பண்பாட்டு அம்சங்கள் நிறைந்திருக்கின்றன இவையெல்லாம் புலம்பெயர்ந்த நாட்டில் வாழுகின்ற எங்கள் பிள்ளைகளுக்குச் சரிவரத் தெரியாது. நாங்களும் அதைப்பற்றி விளக்கிச் சொல்லுவதும் கிடையாது. பொங்கல் என்றால் புது உடைகள் வாங்குவோம். பொங்குவோம். தொலைக்காட்சி யில் நடக்கும் பொங்கல் கொண்டாட்ட நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிப்போம். அத்துடன் பொங்கல் விழா நின்றுவிடும்.

உழைப்பு என்பதுதான் சமுதாயத்தின் அடிப்படை. அந்த உழைப்பில் பங்கு கொள்ளும் அனைவரும் வாழ்த்தப்பட வேண்டியவர்களே. உழைப்புக்கு உதவும் மனிதர்கள், உழைப்புக்கு உதவிடும் விலங்குகள், உழைப்புக்கு உதவிடும் கருவிகள் கவனத்தில் கொள்ளபடுவதுதான் சமுதாய அறமாகும். அப்படியான ஒரு அறத்தினை வலியுறுத்தத்தான் தைப்பொங்கலைக் கொண்டாடுகிறோம் என்று எங்கள் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

உலகிலே உயிர்வாழ்வதற்கு வெப்பம் முக்கியமானது. காற்று முக்கியமானது. நீர் முக்கியமானது. உணவு முக்கியமானது. இவற்றுக்கெல்லாம் இறை அம்சம் கொடுத்து அவற்றை சமூகத்தின் உயர் நிலையில் வைக்கும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது என்பதை எங்கள் பிள்ளைகளின் மனதில் இருத்துவதும் முக்கியமான பொறுப்பாகும். இவையாவும் தைப்பொங்கலுடன் இணைகின்றன என்பதுதான் இங்கு சுட்டப்பட வேண்டிய அவசியமான அம்சம் எனலாம்.

விவசாயம் என்பதுதான் சமூக வாழ்வுக்கு முதுகெலும்பாகும். விவசாயம் கொண்டுவருகின்ற பொருள்களால்தான் சமூகத்தில் மக்களின் அன்றாட வாழ்வே சிறப்பாகிறது. அந்த விவசாயத்தைச் செய்பவன் இந்தப் பொங்கலில் போற்றப் படுகின்றான். அந்த விவசாயிக்கு உதவும் மாடுகள் பூசிக்கப் படுகின்றன. விவசாயத்தை செழிப்பாக்கும் சூரியன் வணங்கப்படுகிறது. விவசாயத்துக்கு உதவும் கருவிகள் மதிக்கப் படுகின்றன. இதனால் தைப்பொங்கல் என்பது நன்றியினை நவில்கின்ற பெருவிழா என்பதை நாங்கள் எங்களின் பிள்ளைகளுக்கு விளங்கப் படுத்த வேண்டும்.



நகரத்தில், புலம்பெயர்ந்த நாட்டில் இருக்கும் பிள்ளைகளுக்கு இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் செய்யப்படும் விவசாயமோ அதன் முறைகளோ அங்கு விலங்குகள் விவசாயத்துக்கு உதவும் விதமோ விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் ஏர் போன்ற கருவிகளோ பற்றியெல்லாம் தெரிவதற்கு உரிய வாய்ப்பு இல்லைத்தான். அவர்களுக்கு அவற்றினைப் பற்றியும் அவற்றின் பயன் பாடுகள் பற்றியும் விளக்கும் பொழுதான் தைப்பொங்கலின் போது செய்யப்படும் மரபார்ந்த விடயங்களை அவர்களின் மனதில் பதியச் செய்யக் கூடிய தாக இருக்கும்.

தையில் அறுவடை செய்த புத்தரிசி கொண்டு புதுப்பானையில் பாலும் சர்க்கரையும் சேர்த்து மண்பானையில் பொங்கி மகிழும்பொழுது பொங்கி வரும் பாலினைப் பார்த்து குடும்பத்தில் உள்ளார்கள் 'பொங்கலோ பொங்கல்' என்று மகிழ்ந்து நிற்கும் நிலையினை எங்கள் பிள்ளைகளின் உள்ளத்தில் இருக்கச் செய்வது மிக இன்றியமையாததாகும்.

கலப்படம் இல்லாமல் யாவுமே உழைப்பின் பயனாக வந்த அரிசி, பால், சர்க்கரை, கரும்பு, இஞ்சி, மஞ்சள், வாழை, மாவிலை, இவையெல்லாம் மகிழ்ச்சியின் அடையாளங்கள். மனித சமூகத்தின் மாண்பின் அடையாளங்கள் எங்களின் பண்பாட்டின் அடையாளங்கள். இவை தைப்பொங்கலில் பயன்படுத்தும் பொழுது ஏற்படும் மனநிறைவுக்கு ஈடு இல்லை என்பதை எங்களின் பிள்ளைகளை உணரச் செய்யவேண்டும்.

கூட்டுறவின் மகத்துவம் தைப்பொங்கலின் சிறப்பாகும். மனிதனும் விலங்குகளும் கூடி உழைத்து அதன் பயனாக வெளிப்படும் ஒரு கூட்டுறவுத் திருநாள் என்றுகூட தைப்பொங்கலை எடுத்துக் கொள்ளலாம். வருடத்தின் தொடக்கமாய்வரும் தையினை மங்களகரமாக வரவேற்க வேண்டுமென்று எண்ணி பொங்கல் திருநாளினை ஏற்படுத்திய எங்களின் முன்னோர்களை நாங்கள் வாழ்த்தாமல் இருந்திட முடியுமா? வருடத் தொடக்கத்தில் மனதில் ஏற்படும் எண்ணங்கள்தான் அந்த வருடம் முழுவதையும் மகிழ்வுடன் வாழ வைக்கும் என்று எண்ணிய உளவியல் சிந்தனையை உவந்தேற்ற வேண்டாமா ?

பொங்கலில் முதலில் மார்கழியின் நிறைவில் போகி என்றொரு பண்டிகை கொண்டாடப் படுகிறது. போகி என்றால் பழைய விடயங்களை, பழைய பொருட்களைக் களைந்து விடுவதாகும். அடுத்து பொங்கல் வருகிறது. பழைய பொருள்களை எரித்து விடுவதைத்தான் போகியில் காண்கிறோம், உண்மையில் இதன் அர்த்தம் அதுவன்று. எங்கள் மனதிலுள்ள பொறாமை, வஞ்சகம். பொய், கபடு, சூது, வாது, இவற்றையெல்லாம் ஞானம் என்னு. தீயில் பொசுக்கி மனதைத் தூய்மை ஆக்கி புத்தாடை உடுத்து, புதுப்பொங்கலை சுவையாக உண்டு, புத்துணர்வு பெற்று நிற்கவேண்டும் என்பதுதான் இதன் தாற்பரியம் எனலாம்.

பொங்கலுக்கு அடுத்து மாட்டுப் பொங்கல் வருகிறது. விவசாயத்துக்கு உதவிய மாடுகளுக்கும், பால் தந்து எம்மை வாழ்வித்த பசுக்களுக்கும் நன்றி நவிலும் நாளாக இது அமைகிறது. அடுத்த நாள் காணும் பொங்கல் அமைகிறது. உற்றார், உறவினரை, பெரியவர்களைக் கண்டு அவர்களின் வாழ்த்தினை, ஆசியினைப் பெற்றுக் கொள்ளும் நாளாக இந்த நாளை அமைத்து மகிழ்கின்றார்கள்.

மாட்டுப்பொங்கல், போகித்திருநாள், காணும் பொங்கல் இவைபற்றி எல்லாம் நகரித்தில் வாழ்கின்றவர்களுக்கோ. புலம்பெயர் பகுதிகளில் வாழ்கின்றவர்களுக்கோ தெரியவருவது குறைவாகும். பொங்கலைக் கூட குக்கரில் பொங்கி தாங்கள் இருக்கும்வீட்டின் அடுப்படியில் வைத்துகரண்டியால் இரண்டு கரண்டி அவசர அவசரமாக வாயில் போட்டுவிட்டு வேலைக்கு ஓடும் நிலையினைதான் பொங்கல் நன்னாளில் காண்கின்றோம். மாடிக் குடி இருப்புகளில் வாழ்கின்றவர்களின் பொங்கலை நினைத்துப் பார்க்கவே பரிதாபமாகவே இருக்கும்.

உழைப்பினை மையமாக்கி, தொழிலினை மையமாக்கி, அந்தஸ்தை மையமாக்கி அன்னிய நாட்டினில் வாழும் எங்கள் தமிழர்களின் தைப் பொங்கல் சற்று சறுக்கிய தைப்பொங்கலாகவே அமைவது தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகிறது. சொந்த ஊரினில் தைப்பொங்கல் கொண்டாடுவதற்கும் குடியேறிய அன்னிய நாட்டில் தைப்பொங்கல் கொண்டாடுவதற்கும் வித்தியாசங்கள் காணப்பட்ட போதிலும் தைப்பொங்கலைக் கொண்டாடி மகிழ்வதில் தமிழர்கள் பின்னிற்கவில்லை என நினைக்கையில் பெருமிதம் கொள்ளத்தான் வேண்டும்.

சமயம் கடந்த விழாவாக தமிழர் விழாவாக தைப்பொங்கல் விளங்குகிறது என்பதுதான் இந்த விழாவின் மிகச் சிறப்பு எனலாம். உலகில் வாழுகின்ற தமிழர்கள் – கிறீஸ்தவராயினும், இந்துக்களாயினும், தைப்பொங்கலை மகிழ்வுடன் பொங்கலோ பொங்கல் என்று பொங்கும் மனத்துடன் கொண்டாடி மகிழ்கிறார்கள். சமயச்சாயம் பூசப்படாத தமிழர் திருநாளாய் தைப்பொங்கல் திகழ்கிறது என்பது தமிழருக்கெல்லம் மிகவும் பெருமையான விடயம் அல்லவ !

**நன்றி நவிலும் விழா! உழைப்பாளரின் உன்னத விழா! கூட்டுறவின் விழா! மதபேதமற்ற மகோன்னத விழா! எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் நிறை என்னும் விழா! எனவே பொங்கலோ பொங்கல் என்று ஆனந்தமாய் கொண்டாடி அகமகிழ்வோம் வாருங்கள்!**

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(முன்னாள் தமிழ்மொழி கல்வி இயக்குநர்,
மெல்பேண், அவுஸ்திரேலியா )

# ஜனாதிபதித் தேர்தலில் காட்டிய ஒற்றுமையை பொதுத் தேர்தலிலும் ஒன்றுபட்டுக் காட்டுவோம்!

## பொங்கல் செய்தியில் யாழ். ஆயர் தமிழ் மக்களுக்கு அழைப்பு

யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் பொங்கல் தின வாழ்த்து செய்தி இது –

தமிழ் மக்களின் நன்றிப் பெருவிழாவான பொங்கல் பெருவிழா உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் மக்களால் கொண்டாடப்படும் வேளை அனைவருக்கும் 2020ஆம் ஆண்டிற்குரிய பொங்கல் தின விழா வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

பொங்கல் விழா நன்றியின் விழா. நம்மை என்றும் நன்றி கூறிக்கொண்டே இருக்க அழைப்பு விடுக்கும் விழா. இறைவன் தரும் அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் என்றும் நன்றி கூற அழைப்பு விடுக்கும் விழா. நம்மைத் தாங்கும் நிலம் நமக்குத் தருகின்ற அனைத்து பயன்களுக்கும் நன்றி சொல்லும் விழா. நிலத்தை போற்றி பேண அழைப்பு விடுக்கும் விழா. நிலத்தை மாசுபடுத்தல், அழித்து அதன் செழிப்பை குறைத்தல் என்பவற்றை நிறுத்தி பாதுகாக்க அழைப்பு விடுக்கும் விழா. முதல் விளைச்சலை இறைவனுக்கும் இயற்கைக்கும் காணிக்கையாக்கும் விழா.

பொங்குக நன்றியால் பொங்குக! இறைவன் அளித்த தரையை எண்ணி! தரையளித்த விளைவை எண்ணி, பொங்குக நன்றியால் பொங்குக!– என இந்த விழாவை மகிழ்வோடு கொண்டாடுவோம்.

30 ஆண்டுகால கொடிய போர் முடிந்த நிலையில் எமது வாழ்வைத் திரும்ப அமைக்கும் பொறுப்பு எம் கைகளிலேயே உள்ளது. இலங்கை நாட்டின் புதிய ஜனாதிபதிக்கான தேர்தலில் தமிழ்பேசும் மக்கள் வெளிப்படுத்திய ஒற்றுமையான, ஒட்டுமொத்த முடிவு ஒரு பெரும் வெற்றியாகும். இந்த ஒற்றுமையின் பலம் நாம் எதிர் கொள்ளவுள்ள பொதுத் தேர்தலிலும் காட்டப்பட வேண்டும். தமிழ் மக்கள் அனைவரும் எல்லா வேற்றுமைகளையும் மறந்து ஒன்றித்து நின்றால் எதையும் சாதிக்க முடியும்.

அடுத்த தேர்தலுக்கான காலம் நெருங்கி வரும் நிலையில் நம்பிக்கையோடு சரியான தெரிவுகளை மேற்கொண்டு எம் நாட்டை கட்டியெழுப்ப உழைப்பதும் செபிப்பதும் எமது கடமையாகும்.

வடமாகாணத்தின் முதல் பெண் ஆளுனராக நியமிக்கப்பட்ட தமிழரான பி.எஸ்.எம். சாள்ஸ் அவர்களை அன்புடன் மகிழ்வோடு வரவேற்கிறோம். அவரின் ஆளுமையில் தமிழ் மக்களுக்கு நல்லது நடக்க வாழ்த்துகிறோம்.








# அல்லற்படுவோருக்கும் உதவும் தைப்பொங்கலாக அமையட்டும்!

## இந்து சமயப் பேரவைத் தலைவர் வாழ்த்துச் செய்தி

கடந்த காலங்களில் ஏற்பட்ட துன்ப, துயரங்கள் நீங்கி ஒளிமயமான எதிர்காலம் உலகமெங்கும் பிரகாசிக்க தைப்பொங்கல் நாளில் எல்லாம் வல்ல ஞானப்பெருங் கூத்தனை பிரார்த்தித்து அனைவர்க்கும் தைப்பொங்கல் நல் வாழ்த்துக்களை இந்துசமயப் பேரவை சார்பில் தெரிவித்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மனிதநேயம் பற்றி எக்காளத்தொனியில் உலகமெங்கும் பேசும் இக்காலத்தில் இதற்கு மாறுபட்ட செயல்கள் நடைபெற்று வருவது இப்புனித நாளிலிருந்து நிறுத்தப்பட வேண்டும். மனித நேயத்தை பற்றிப் பேசுவதைக் காட்டிலும் மனிதநேயத்தோடு வாழ்வதே மேலானது.

**சொல்லுதல் யார்க்கும் எளியவாம் - அரியவாம்**

சொல்லியவாறு செயல் என்கிறது வள்ளுவம் மனித நேயம் பற்றிக் கோமிட்டு ஆர்ப்பரித்தால் எதுவும் நடந்து விடப்போவதில்லை.மனித நேயத்தோடு தம்மிற் தாமே வாழப்பழகிக் கொள்ள வேண்டும். இதுவே மலானது.

மனிதநேயம் ஒவ்வோர் உள்ளங்களிலும் அடிநாதமாக ஒலிக்க வேண்டும். இது, மனிதனிடம் சித்த சுத்தி ஏற் படும்போது ஒளிவிடத் தொடங்குகிறது. இவ்விதம் ஒளி விடுவதற்கு ஆத்மீக வழிபாடுகள் துணை நிற்கின்றன. ஒருவரை ஒருவர் குறை கூறுவதை நிறுத்திக் கொண்டு நாம் அனைவரும் இதயசுத்தியோடு, உயரிய கொள்கை யோடு எமது புனிதமான வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வோமாக!

தானுண்டு தனது குடும்பம் உண்டு என்று வாழ்வாரும் உளர். அவற்றோடு அதற்குப் புறம்பாக உலகம் வாழ வேண்டும், உலகுக்காகவும் ஏதும் செய்ய வேண்டும் அல்லது நினைக்க வேண்டும் என்ற புனித நோக்கோடு வாழ்பவர்களே மேலானவர்கள். இவ்விதம் வாழ்வதே மேலானது. இதனையே ஔவையார் 'அறம் செய்ய விரும்பு' என்றார். எப்பொழுதும் எக்கணமும் தர்மம் செய்ய விருப்பு உள்ளவனாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும். இவ்வுணர்வை ஏற்படுத்துவதற்கு எம்மிடம் ஈஸ்வர அர்ப்பணம் தோன்ற வேண்டும். இதன் மூலம் பண்பட்ட உள்ளங்கள் மலர்கின்றன. இதற்கு தைப்பொங்கல் போன்ற ஆத்மீக நிகழ்வுகள் வழிசமைக்கின்றன.

இந்நாளில் இறைவழிபாட்டில் ஈடுபடுவதோடு ஏதிலிகளாக அல்லற்படுவோர்க்கும் ஏழைகளுக்கும் இயன்றவற்றைக் கொடுத்து சிவபிரான் அருளிற்கு ஆளாகுவோமாக!

ஈசான.சி.சக்திகிரீவன்,
(கௌரவ தலைவர் - இந்துசமயப் பேரவை)



## ஆனந்தம் அகநிறைவு அமைய பொங்கல் அமையட்டும் !



பொங்கலென்று சொன்னாலே
பூரிப்பும் கூடவரும்
மங்கலங்கள் நிறையுமென்று
மனமதிலே தோன்றிவிடும்
சங்கடங்கள் போவதற்கும்
சந்தோசம் வருவதற்கும்
பொங்கலை நாம்வரவேற்று
புதுத்தெம்பு பெற்றிடுவோம் !

தைபிறந்தால் வழிபிறக்கும்
எனவெண்ணி மகிழுகிறோம்
கைகட்டி நின்றுவிடின்
வழியெமக்கு வந்திடுமா
தைபிறக்க முன்னாலே
தளர்வின்றி உழையுங்கள்
தைபிறக்கும் வேளையிலே
கைகொடுக்கும் தைமாதம் !

எதிர்காலம் மகிழ்வாக
அமையுமென எண்ணிடுவோம்
இறந்தகாலம் தனையெண்ணி
எமையிழக்கா திருந்திடுவோம்
நிகழ்கால நிலையினிலே
நிம்மதியை நாடிடுவோம்
வரும்பொங்கல் எங்களுக்கு
வளமாகும் எனநினைப்போம் !

புத்தரிசி வாங்கிடுவோம்
புதுப்பானை எடுத்துவைப்போம்
மொத்தமுள்ள உறவுகளை
முழுமனதாய் வாழ்த்திடுவோம்
பால்பொங்கி வருவதுபோல்
வாழ்வுவளம் பெருகவென
சர்க்கரையை சேர்த்தபடி
பொங்கியே மகிழ்ந்திடுவோம் !

பெற்றாரின் ஆசியினை
பெரும்பேறாய் எண்ணிடுவோம்
கற்பித்த ஆசானை
கால்தொட்டு வணங்கிடுவோம்
புத்தாடை எனுமெண்ணம்
புத்துணர்வை வழங்கட்டும்
பொங்கலென்றும் வாழ்வினிலே
புத்தொளியாய் மிளிரட்டும் !

சாந்தியொடு சமாதானம்
வரப்பொங்கல் அமையட்டும்
சன்மார்க்கம் மனமெல்லாம்
நிறையப் பொங்கலமையட்டும்
வேண்டியவர்க்கு வேண்டியன
கிடைக்கப் பொங்கலமையட்டும்
வீண்வம்பு வேதனைகள்
விலகப் பொங்கலமையட்டும் !

ஆனந்தம் அகநிறைவு
அமைய பொங்கலமையட்டும்
அறம்நீதி அத்தனையும்
நிலைக்கப் பொங்கலமையட்டும்
வேற்றுமைகள் வில்லங்கம்
விலகப் பொங்கலமையட்டும்
விரோதமனம் விட்டோட
பொங்கலெமக் கமையட்டும் !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண் .... அவுஸ்திரேலியா

# தை பிறந்தால் வழி பிறக்கும் கூடவே விடுதலையும் கிட்டட்டும்

## தமிழரசுத் தலைவர் மாவை பொங்கல் செய்தி



வரப்புயர, நீர் உயர, நெல் உயரக் குடி உயரக் கோன் உயரும் என்று ஆன்றோர் முதுமொழியுண்டு. ஆண்டுதோறும் புரட்டாதித் திங்களிலிருந்து இந்துமாக் கடல் பாக்கு நீரினைப் பிரதேசங்களுக்கு பருவப் பெயர்ச்சிக் காற்றும் மழையும் வந்துவிடும். சூரியக் கிரக வழி வட்டமும் தெற்கு நோக்கி விலகிவரும்.

அக்காலத்தில் சூரிய வெப்பத்தால் நீர் ஆவியாய் மேலெழுந்து பரவி பருவப் பெயர்ச்சியின் போது மழையாய் பெய்கிறது. இக்காலத்தில் மழை வீழ்ச்சி பெருகும். வேளாண் மக்கள் நெல்விதைப்பதற்காய் வயல் நிலங்களில் வரம்பு கட்டி மழை வளம் சோப்பர். இதுதான் வரப்புயர, நீர் உயர, நெல்லுயர, குடியுயர, ஈற்றில் நாட்டு மன்னன் ஆட்சி ஓங்கும். குடிமக்கள் குதூகலித்து மகிழ்வர். வாழ்வும் வளமும் பெறுவர்.

அதன் பொருட்டு கோவில்களில் தெய்வச் சந்நிதிகளில் வழிபாடியற்றுவர். தமிழகத்தில் மூன்றாம் நாள் நீர் நிலையோரங்களில் கடலோரங்களில் மக்கள் கூடிக் காணும் பொங்கலென்றும் கொண்டாடுகின்றனர்.

பண்டைத் தமிழர் பாரம்பரியத்தில் வேளாண்மக்கள் இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் உள்ளங்கொண்ட இயல்பும் அதனால் உவகையும் பண்பாடுங் கொண்ட மாண்புடை நாகரிகம் கொண்டவர்கள். இதனால் சூரியனுக்கு பொங்கல் முதல்நாள் நன்றி தொவிக்கின்றனர்.

உழுதுண்டு வளம் பெறும் வேளாண் மக்கள் மாட்டுக்கும் நன்றி தொவிக்கின்றனர். உழவுக்குக் கலப்பை நுகம், புட்டி மாடு உழவுக்கு உதவுவதால், பால் தருவதால், செல்வம் பெருகுவதால், மாட்டுப் பொங்கல் எடுத்து மக்கள் மகிழ்கின்றனர். தைப்பொங்கலை உழவர் திருநாள் என்றும் அழைப்பர். இந்நாளில் அறிவியல் வளர்ச்சியினால் வேளாண் தொழிலில் இயந்திரக் கலப்பைகள் உழவுக்கும் நெல்விதைப்பதற்கும், அறுவடை செய்வதற்கும் பெரும் பயன்தருகிறது.

இருப்பினும் உலகெங்கும் தமிழர் நாகரிகத்தில் இயற்கை போற்றுதலும், வாழ்வில் வளம் பெறுவதற்கும் காரணமாய் விளங்கும் சூரியன், மழை நீர், உழவுக்கும், பால் தரவும் மாட்டுச் செல்வம், வியர்வை சிந்தி உழைக்கும் மக்கள் நன்றியுடன் இதயத்தில் பொங்கி மகிழ்கின்றனர்.

தைத்திங்களில் இல்லங்களிலும், கோவில்களிலும் தெய்வம்தொழுது, நெருப்புமூட்டி, புதுப்பானையில் நீர் நிறைத்து கொதிநீர் கொள்ளப் புத்தரிசியும், பாலும் கரும்புச் சாறும், முந்திரி, பருப்பு வகையும், வாசனைத் திரவியங்களும் கலந்து, பொங்கல் செய்து, சூரியன் எழுந்து வரும் கிழக்கு நோக்கி வணங்கி பொங்கல் படைத்து மக்கள் தாமும் பொங்கலுண்டு உவகை, குதூகலிப்படைவர். புதிய நம்பிக்கை பொங்கிட வாழ்வும் வளமும் பெற்று, வாழ்ந்து, உழைப்பால், அர்ப்பணிப்பால் தம்மைத் தாமே ஆளும் மக்களாய் பண்டைத் தமிழர் நாகரிகம் செழித்து இன்று வரை மக்களை வாழ்வித்துயரும் மாண்பு, தை பிறந்தால் வழி பிறக்கும் எனப் புதுத் தென்புடன் வாழ்வை ஆரம்பிக்கின்றனர்.

இலங்கையிலும் 70ஆண்டுகளுக்கு மேலாக அடிமைத்தளை அறுத்து, சுதந்திரக் காற்றைச் சுவாசித்து வாழும் நாகரிகத்தை அடைவதற்கு பல வழிகளிலும் போராடி வரும் எம் தமிழ் மக்கள் அந்த நாகரிகத்தை அடைந்திட வேண்டி தம் பல இலட்சம் உயிர்களை பலி கொடுத்தும் அந்த விடுதலை, சுதந்திரம் கிடைக்கவில்லையென்று கண்ணீரும் கம்பலையுமாய் வீழ்ந்து கிடக்கின்றனர்.

இருப்பினும் எம் தமிழ் மக்கள் இத்திங்களில், தைத்திருநாளில் பொங்கி மகிழ வேண்டும், விடுதலை விடிவு கிட்டும் என்று தை பிறந்தால் வழி பிறக்கும் என்று புது நம்பிக்கை கொண்டு எழுவோம் எனப் பொங்கி மகிழ்வோம். தைப்பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் எனக் கொண்டாடி மகிழ்வோம் என வாழ்த்துகின்றோம்.

**- மாவை.சோ.சேனாதிராசா எம்.பி.**
**தலைவர், இலங்கைத் தமிழரசுக்கட்சி**




# துன்பங்கள் தொலைந்து இன்பமே எங்கும் சூழட்டும்

## யாழ் நகர் மேயர் வாழ்த்து

தைப்பொங்கல் தமிழர்களின் பொது நன்நாள். ஆதவனுக்கு நன்றி செலுத்தும் அர்ப்பணிப்புக்கு உரிய நாள். இன்றைய காலகட்டத்தில் சமய வேறுபாடற்று பொதுப்பண்டிகையாக உலகிற்கு உணவு தரும் உழவர் திருநாள் என அனைவரும் இந்நன்நாளை வரவேற்கின்றனர். கொண்டாடுகின்றனர்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பர். தை ஆரம்பத்திலிருந்து நற்காரியங்களை நம்மவர் மேற்கொண்டு வருவது



வழமையாய் தொன்றுதொட்டு இருந்து வரும் பாரம்பரியமாகும். இதனாலே தான் தை மாதத்தின் மகத்துவமும் தைப்பொங்கலின் சிறப்பும் எமக்கு எடுத்துக்ககாட்டாக விளங்குகின்றன.

துன்பங்கள் தொலைத்து மக்கள் மத்தியில் இன்பமே விளங்கட்டும். இதுவே எனது இதய பூர்வமான பொங்கல் வாழ்த்தாகும்.

*பொங்கலோ! பொங்கல்!*
*பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக.*
*இத்தைத்திருநாளில் இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!*

**இம்மானுவல் ஆனல்ட்**
**மாநகர முதல்வர்,**
**யாழ். மாநகர சபை**



# தர்மவழியில் அனைவரையும் அரவணையுங்கள் தலைவர்களுக்கு ஆறு. திருமுருகன் அழைப்பு

இயற்கைக் கடவுளாகிய சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் திருநாளே தைப்பொங்கல். சூரியவழிபாடு இந்துமக்களின் பாரம்பரிய வழிபாடு. எம் முன்னோர்கள் கண்கண்ட கடவுளாகக் கதிரவனைப் போற்றி தைத்திங்கள் நாளில் பொங்கிப் படைப்பார்கள். உழுதுண்டு வாழும் உழவர் பெருமக்களை வாழ்த்தும் திருநாளாக தைப்பொங்கல் நாளை எம் முன்னோர் கருதினார்கள். எனவே, இத்திருநாளில் அனைவரும் அதிகாலை எழுந்து இல்லத்தில் பொங்கி இறைவழிபாடு செய்யுங்கள்.

எங்கள் மண்ணில் ஒவ்வொரு தைப்பொங்கல் நாளிலும் எப்போது விடியும் என நாம் கேள்வி எழுப்பியவாறு காத்திருக்கின்றோம். என்றோ ஒருநாள் விடியும் என்பது உண்மை. சத்தியத்தின் வடிவமாக விளங்கும் தெய்வமான சூரியபகவானிடம் அனைவரும் விடிவுகேட்டு முறையிடுவோம். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது உண்மை. நல்ல காரியங்களைத் திட்டமிட்டுச் செய்பவர்கள் தோற்றுப்போவதில்லை,



எனவே தைமாதத்தோடு அனைவரும் நல்ல காரியங்களைத் திட்டமிடுங்கள். அக்காரியங்களை வெற்றியாக்குவதற்கு வியர்வை சிந்தி உழைப்பதற்குத் தயாராகுங்கள்.

பாடுபட்டு உழைப்பவர்க்கே இப்பாரிடம் சொந்தமையா என்ற கவிமணியின் வார்த்தைகள் மிகவும் உன்னதமானவை. சோம்பலை தவிருங்கள், அனைவரும் முயற்சியாளர்களாக மாறுங்கள், முயற்சி வெற்றிதரும். தைத்திருநாளிலே நாம் நல்லதை சாதிப்பதற்கு ஆயத்தமாவோம்.

தமிழ் மக்களின் தலைவர்களே, கோபங்களை இறக்கி வையுங்கள், ஒன்றுபட்டு நில்லுங்கள். தர்மவழியில் அனைவரையும் அரவணைத்துக் கொள்ளுங்கள். சத்தியவழியில், சமாதான வழியில் மக்களை காப்பதற்கு முன்வாருங்கள்.

தைத்திங்கள் திருநாளில் அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழ எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்.**
**(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை.**
**தலைவர்,சிவபூமி அறக்கட்டளை.இலங்கை.)**

## வங்கி வாகனம் மோதி இரண்டு பேர் படுகாயம்

வவுனியா, ஜன. 15

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வங்கி ஒன்றுக்குச் சொந்தமான வாகனம் ஓமந்தை விளக்குவைத்தகுளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளை மோதியது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த 23, 33 வயதுடைய இருவரும் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# கட்சியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டார் ரஞ்சன்!



கொழும்பு, ஜன. 15

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் கட்சி உறுப்புரிமையைத் தற்காலிகமாக இடைநிறுத்த ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் அகில விராஜ் காரியவசம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இதனை தெரிவித்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்க மாதிவெலயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைத்து கடந்த 4ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இதன்போது பல இறுவட்டுக்கள் அவரின் இல்லத்தில் இருந்து மீட்கப்பட்டன. இதனையடுத்து முன்னைய ஆட்சியின்போது குற்றப்புலனாய்வுத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் சானி அபேசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா உள்ளிட்ட பலருடன் அவர் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பான குரல் பதிவுகள் அனைத்தும் பகிரங்கமாகியிருந்தன.

அதன் பின்னர் அவர் மீது தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில், அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

எனினும் அவர்மீதான குற்றச்சாட்டுக்கள் மற்றும் மேலும் பல தொலைபேசி குரல் பதிவுகளும் தொடர்ச்சியாக வெளிவந்தவண்ணமே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)

## வைத்தியர் ஷாபியை மீண்டும் சேவையில் இணைக்கும் இறுதி முடிவு இன்னும் இல்லை

கொழும்பு, ஜன. 15

கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள வைத்தியர் எஸ்.எஸ்.எம். ஷாபி, தன்னை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு விடுத்துள்ள கோரிக்கை தொடர்பாக இது வரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என அரச சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரச சேவை ஆணைக்குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள வைத்தியர் ஷாபி தன்னை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் செயலாளரின் ஊடாக அரச சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவை குழு விடம் கோரியிருந்தார்.

இந்நிலையில் அந்த வைத்தியருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக ஆரம்ப கட்ட விசாரணைகளை நடத்தி அதன் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளரை கேட்டுள்ளபோதிலும் இது வரை அந்த அறிக்கை கிடைக்கவில்லை என அரச சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கை மற்றும் வைத்தியர் ஷாபியின் கோரிக்கை ஆகியவை தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளர் தனது பரிந்துரையை முன்வைக்கும் வரை வைத் தியரை கடமையில் இணைத்துக் கொள்வது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படாது என அரச சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கல்வியங்காடு மீன் சந்தையை விஸ்தரிக்குமாறு கோரிக்கை





யாழ்ப்பாணம், ஜன. 15

கல்வியங்காடு மீன் சந்தையை விஸ்தரித்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் யாழ். மாநகரசபையின் ஆளுகையின் கீழிருந்த கல்வியங்காடு பொதுச்சந்தை புனரமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் திறந்து வைக்கப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட மீன் சந்தை போதிய வசதிகளின்றி காணப்படுவதால் மீன்களை வாங்கும் பொதுமக்கள் மற்றும் குறிப்பாகப் பெண்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனதெரிவித்துள்ளனர்.

மீன் சந்தையை விஸ்தரித்து உரிய வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வார இறுதி நாள்களில் சுமார் 2500 இற்கும் அதிகமான பொதுமக்கள் இந்த மீன் சந்தையைப் பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரணில் சிங்கப்பூருக்கு!



கொழும்பு, ஜன. 15

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூருக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனிப்பட்ட விஜயமாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்ற அவர், இன்று மீண்டும் நாடு திரும்பவுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவி குறித்து தீர்மானிக்க நாளை வியாழக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமும் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இரண்டு பஸ்கள் மோதுண்டு கினிகத்தேனையில் விபத்து

### 23 பேர் காயம்

கொழும்பு, ஜன. 15

கினிகத்தேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தியகல பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 23 பேர் காயங்களுக்குள்ளாகிய நிலையில் வட்டவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஹற்றன் - கண்டி பிரதான வீதியில் அட்டனிலிருந்து கண்டி நோக்கி சென்ற தனியார் பஸ்ஸும், கண்டியிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற பஸ்ஸும் கினிகத்தேனை தியகல பகுதியில் வைத்து நேருக்கு நேர் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளன என விசாரணைகளை மேற்கொண்டு வரும் கினிகத் தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸில் பயணித்த 23 பேர், காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் 22 பேர் வட்டவளை வைத்தியசாலையிலும், ஒருவர் கினிகத்தேனை வைத்தியசாலையிலும், அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 11 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளமையோடு, மேலும் 6 பேர் நாவலப்பிட்டி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ஐ)

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# இலங்கை – ரஷ்யா இடையே தொடர் ஆயுதப் பரிமாற்றம்!

கொழும்பு, ஜன. 15

இராணுவத்திற்கு ஆயுதங்களை வழங்குவதன் மூலம் இலங்கையுடன் தமது ஆயுத வர்த்தகம் தொடந்தும் முன்னெடுக்கப்படும் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

இலங்கையுடன் இரு தரப்பு வர்த்தகத்தை விரிவு படுத்த ரஷ்யா முயற்சிக்கும் என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லாவ்ரோவ் தெரிவித்தார்.

இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ விஜயமாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை இலங்கைக்கு வந்த அவர், வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதனை அடுத்து கொழும்பில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவுடன் இடம்பெற்ற கூட்டுச் செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார். (ஐ)

# மாமியாரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த மருமகன்

கொழும்பு, ஜன. 15

ஜாஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துடெல்ல பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கிப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடும்பப் பிரச்சினை காரணமாக உயிரிழந்த பெண்ணின் மகளின் கணவரினால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மருமகன் அப்பகுதியில் இருந்த தப்பிச் சென்றுள்ளார் எனக் கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பில் ஜாஎல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ராஜித சி.ஐ.டியில்!

*கொழும்பு, ஜன. 15*

*நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக நேற்றுக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜரானார்.*

*நேற்று மதியம் 12 மணியளவில் அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜரானார்.*

*கொழும்பில் உள்ள தனியார் வைத்திய சாலையில் இருந்து நேற்று முன்தினம் இரவு வெளியேறிய நிலையிலேயே அவர் நேற்றுக் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையானார். (ஐ)*

# முல்லைத்தீவு மாவட்டத்தின் கடலுணவு உற்பத்தி வளர்ச்சி



முல்லைத்தீவு, ஜன. 15

முல்லைத்தீவு மாவட்டத்தின் கடலுணவு உற்பத்தி 2018ஆம் ஆண்டை விடவும் 2019ஆம் ஆண்டு 100 வீத வளர்ச்சி கண்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 908 மீனவக் குடும்பங்கள் உள்ளன. மொத்தக் குடும்ப அங்கத்தவர்கள் 12 ஆயிரத்து 217 பேர். அவர்களில் 5 ஆயிரத்து 388 பேர் கடற்றொழில் மேற்கொள்கின்றனர்.

கடற்றொழிலே இவர்களின் வாழ்வாதாரமாக உள்ளது. மொத்தமாக ஆயிரத்து 323 படகுகளில் அவர்கள் கடற்றொழில் செய்கின்றனர். போரின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் கடலுணவு உற்பத்தி பின்னடைந்திருந்தது.


2018ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் மொத்தக் கடலுணவு உற்பத்தி 3 ஆயிரத்து 278 மெற்றிக் தொன்னாகும். 2019ஆம் ஆண்டு கடலுணவு உற்பத்தி 100 வீதத்தால் அதிகரித்துள்ளது.

2019ஆமு ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் கடலுணவு உற்பத்தி 6 ஆயிரது 573 மெற்றிக் தொன்னை எட்டியுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் தெரிவித்தது.

# தைப்பொங்கல் வியாபாரம் யாழ்ப்பாணத்தில் படு சூடு!







தைப்பொங்கலை முன்னிட்டு பொங்கல் வியாபாரம் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் களைகட்டியது.

யாழ்ப்பாணத்தில் முதன்மைச் சந்தைகளில் ஒன்றான திருநெல்வேலிச் சந்தையில் பொங்கலை முன்னிட்டு பொங்கலுக்கு தேவையான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. (ஐ)

# பழ.நெடுமாறனின் செயலர் விக்னேஸ்வரனுடன் சந்திப்பு!



சென்னை, ஜன. 15

தமிழ் நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டு சென்னையில் தங்கியிருந்த வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான முன்னாள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை மூத்த ஈழ ஆதரவாளரான பழ.நெடுமாறனின் சார்பில் அவரது கட்சியின் பொதுச் செயலாளர் ஆவல் கணேசன் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

தமிழர் தேசிய முன்னணியின் தலைவரும் மூத்த ஈழ ஆதரவாளருமான பழ.நெடுமாறனைச் சந்திக்கும் முயற்சி வேறு சந்திப்பு நெருக்கடிகளால் கைகூடாமல் போயிருந்த நிலை யில் பழ.நெடுமாறனின் சார்பில் அவரது கட்சியின் பொதுச் செயலார் ஆவல் கணேசன் க.வி. விக்னேஸ்வரனை நேரில் சந்தித்து கலந்துரையாடியதுடன் பழ.நெடுமாறனு டன் தொலைபேசியில் இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்+திருந்தார்.

க.வி.விக்னேஸ்வரன் மற்றும் பழ.நெடுமாறன் ஆகிய இருவரும் தொலைபேசி ஊடாக அவரவர் உடல் நலம் குறித்து பரஸ்பரம் விசாரித்துக்கொண்டதுடன் ஈழத் தமிழரின் இன்றைய நிலை குறித்தும் உரை யாடியிருந்தனர்.

தொடர் சந்திப்புகள் காரணமாக நேரில் சந்திக்க முடியா திருந்தமையை எடுத்துக் கூறியதுடன் அடுத்தமுறை தமிழ் நாட்டிற்கு வரும் போது நிச்சயம் நேரில் சந்திப்பதாகவும் க.வி.விக்னேஸ்வரன் பழ. நெடுமாறனிடம் கூறியிருந்தார்.

தமிழ்நாட்டு பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலையில் தாயகம் திரும்பிய தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரனைச் சென்னை விமான நிலையம் வரை சென்று வழியனுப்பிவைத்துள்ளார் தமிழர் தேசிய முன்னணியின் பொதுச்செயலாளர் ஆவல் கணேசன். (ஐ)



# அதிபரை இடமாற்ற வலியுறுத்தி புதுக்குடியிருப்பில் போராட்டம்!






முல்லைத்தீவு, ஜன. 15

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வேணாவில் ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயத்தின் முன்பாக நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

மாணவர்கள், பெற்றோர்கள், வேணாவில் கிராம மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை அதிபரை இடமாற்ற வலியுறுத்தி இந்தப் போராட்டம் இடம்பெற்றது. பாடசாலை வாயில் முன்பாக நேற்றுக் காலை 7 மணிக்கு போராட்டம் நடந்தது. (ஐ)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

சசிகா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

தலைமைக் காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
0212215472
0703013012

காரைநகர்
021 225 2454,
070 510 2484

கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்
021224 3393
0703013014

பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு
கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
0212215472
0703013012

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

# 3 ஆண்டுகளுக்குப் பின் செரீனா முதல் சம்பியன்



நியூஸிலாந்தில் நடைபெற்றுவந்த ஒக்லாந்து பகிரங்க ரென்னிஸ் தொடர், அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம் ஸின் கைகளை சம்பியன் கிண்ணம் அலங்கரித் தவாறு நிறைவுக்கு வந்துள்ளது.

மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், அமெ ரிக்காவின் முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்சும், சகநாட்டு வீராங்கனையான ஜெசிகா பெகுலாவும் பலப்பரீட்சை நடத்தினர்.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை ஏற்படுத் திய இப்போட்டியில், முதல் செற்றை செரீனா வில்லியம்ஸ் 6 - 3 என கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றி லும், தனது ஆதிக்கத்தை தொடர்ந்த செரீனா வில்லியம்ஸ், 6 - 4 என செற்றைக் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றார்.

கடந்த 2017ஆம் ஆண்டுக்கு ஆஸ்திரேலியப் பகிரங்க ரென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற கையோடு தாய்மை அடைந்த செரீனா, ஓராண்டு ரென்னிஸிலிருந்து ஓய்வில் இருந்தார்.

இதன்பிறகு களம் புகுந்த செரீனா, இரண்டு முறை கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டத்துக்கான இறுதிப் போட் டிக்கு முன்னேறியபோதும், சம்பியன் பட்டம் வெல்ல முடியவில்லை.

தற்போது சுமார் 3 ஆண்டுகளுக்கு பிறகு செரீனா வில்லியம்ஸ், முதல் சம்பியன் பட்டத்தை வென்று சாதித்துள்ளார்.

ஆண்டில் தான் விளையாடிய முதல் தொடரிலேயே சம்பியன் பட்டம் வென்ற தன்மூலம் உற்சாகமடைந்துள்ள செரீனா, அடுத்து நடைபெறவுள்ள ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொட ரிலும் சம்பியன் பட்டம் வென்று சாதிக் கும் முனைப்பில் உள்ளார்.

38 வயதான செரீனா வில்லியம்ஸ், இதுவரை ரென்னிஸ் உலகில் 23 கிராண்ட்ஸ் லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

இன்னமும் ஒரு கிராண்ட்ஸ்லாம் சம் பியன் பட்டத்தை வெல்லும் பட்சத்தில், ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீராங் கனையான மார்கரட் கோர்டின் 24 கிராண்ட்ஸலாம் பட்டங்கள் என்ற அதி கூடிய கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் என்ற சாதனையைச் சமன் செய்வார்.

செரீனா வில்லியம்ஸ், ஒக்லாந்து பகிரங்க ரென் னிஸ் தொடரில் கிடைத்த 62,300 ஆஸ்திரேலிய டொலர் கள் பணப்பரிசை, ஆஸ்திரேலிய காட்டுத்தீயால் பாதி க்கப்பட்டவர்களுக்கு நிவாரணமாக வழங்கினார்.



# கரோலினா சம்பியன்

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வந்த பிரிஸ்பேன் பகிரங்க ரென்னிஸ் தொடர், இனிதே நிறைவுப் பெற்றுள் ளது.

நேற்று முன் தினம் நடைபெற்ற இறு திப் போட்டியில், செக் குடியரசின் கரோ லினா பிளிஸ்கோவாவும், அமெரிக்கா வின் மெடிஸன் கீசும் பலப்பரீட்சை நடத் தினர்.

பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட் டியில், முதல் செற்றை 6-4 என கரோ லினா பிளிஸ்கோவா கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டா வது செற்றில், பதிலடி கொடுக்கும் முனைப்பில் விளையாடிய மெடிஸன் கீஸ், செற்றை 6 - 4 என கைப்பற்றி பதி லடி கொடுத்தார்.

இருவரும் தலா 1 செற்றைக் கைப்பற் றியதால் வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செற் பரபரப்படைந்தது.

இதில் இருவரும் ஆக்ரோஷமாக விளையாடினர். விறுவிறுப்பாக நகர்ந்த இப்போட்டியில், 7 - 5 என கரோலினா பிளிஸ்கோவா போராடி செற்றைக் கைப் பற்றிச் சம்பியன் பட்டத்தை வென்றார்.

இந்தச் சம்பியன் பட்டம் மூலம் தொடர்ச்சியாக இரண்டாவது முறை சம்பியன் பட்டம் வென்ற கரோலினா பிளிஸ்கோவா, இதுவரை இத்தொடரில் மூன்று சம்பியன் பட்டங்களை வென் றுள்ளார்.

இதற்கு முன்னதாக கரோலினா பிளிஸ்கோவா, 2011ஆம் மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் சம்பியன் பட்டம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பதவியில் இருந்து விலக நான் தயார்

இந்தியாவுடனான தோல்வி யைத் தொடர்ந்து இலங்கை யில் ரி - 20 அணித்தலைவர் பதவியில் இருந்து விலகத் தயார் என லசித் மலிங்க பர பரப்பை கிளப்பியுள்ளார்.

2020ஆம் ஆண்டின் முதல் தொடராக இலங்கை அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடியது.



முதல் போட்டி மழையால் கைவிடப்பட்ட நிலையில், அடுத்து நடந்த இரண்டு போட்டிகளிலும் இந்திய அணி அபார வெற்றிப் பெற்று இலங்கையை வெள் ளையடித்தது.

இலங்கை அணி 2020ஆம் ஆண்டை தோல்வியுடன் தொடங் கியதால் ரசிகர்கள் ஏமாற்றம டைந்துள்ளனர்.

இந்தியாவுடனான தொட ருக்கு பிறகு அணித்தலைவர் பதவியலிருந்து விலக தயாராக இருப்பதாக மலிங்க பரபரப்பைக் கிளப்பினார்.

இலங்கை அணி பந்துவீச் சாளர்கள் விக்கெட்டு களை எடுக்க தவறிய அதே வேளையில், வலி மையான இந்திய அணிக்கு எதி ராக பெரி யதாக துடுப் பாட்டக்காரர் கள் யாரும் ஜோடி சேர ஓட் டங்களை குவிக்க தவறி விட்டனர் என்பதை மலிங்க ஏற்றுக்கொண்டார்.

நான் எந்த நேரத்தி லும் தயாராக இருக்கி றேன், நான் பதவி வில கத் தயாராக இருக்கிறேன் என்று 36 வயதான மூத்த பந்து வீச்சாளரும், இலங்கை ரி - 20 அணித்தலைவருமான மலிங்க தெரிவித்தார்.

மலிங்கவின் தலைமையின் கீழ், இலங்கை ஐ.சி.சி. ரி - 20 தர வரிசையில் எட்டாவது இடத்தில் நீடிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# நாட்டைவிட்டு வெளியேறினார் ஈரானிய வீராங்கனை கிமியா

ஈரான் அரசின் முன்னுக்கு பின் முரணான நடவடிக்கையால், ஒலிம்பிக் கில் பதக்கம் வென்ற ஒரே பெண் வீராங் க னை நாட்டை விட்டு வெளியேறுவ தாக அறிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள பதிவில், போலித்தனம், பொய், அநீதி, முகஸ்துதி ஆகியவை நிறைந்த ஈரானின் ஒரு அங்கமாக நான் விரும்பவில்லை என்று 21 வயதாகும் கிமியா அலிசாதே தனது சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

ஈரானின் ஒடுக்கப்பட்டுள்ள லட்சக் கணக்கான பெண்களில் தானும் ஒரு வர் என்றும், தனது வெற்றியை ஈரான் அரசு பிரசார கருவியாகப் பயன்படுத் துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2016ஆம் ஆண்டில் ரியோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் டேக் வாண்டோ - வில் வெண்கலப் பதக்கம் வென்றதன் மூலம் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற முதல் ஈரானிய பெண் வீராங்கனை என்ற சாதனையை அவர் படைத்திருந்தார்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானி லுள்ள சர்வதேச விமான நிலையத் தில் இருந்து உக்ரைன் தலைநகரை நோக்கி புறப்பட்ட விமானம் அடுத்த சில நிமி டங்களிலேயே விபத்துக்குள் ளானதில் அதில் பயணித்த 176 பேரும் உயிரிழந்தனர். மூன்று நாட்களுக்கு பின் ஈரான் தனது தவறால் இது நிகழ்ந் தது என்று ஒப்புக்கொண்டது.

இந்த முன்னுக்கு பின் முரணான பேச்சால் அந்நாட்டில் கடந்த இரண்டு நாட்களாக போராட்டங்கள் நடைபெற்று வரும் சூழலில், கிமியா அலிசாதே இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

# சபையின் அனுமதியின்றி 96 இலட்சம் ரூபா செலவு

## கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜன. 15

கரைச்சி பிரதேச சபையில் கடந்த ஆண்டு மாத்திரம் 96 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட நிதி சபையின் அனுமதியின்றி எவ்வித சட்டத்திட்டங்களுக்கும் உட்படாது செலவு செய்யப்பட்ட பின்னர் நிதி விடுவிப்புக்குச் சபையின் அனுமதிக்குக் கொண்டுவரப்படுகிறது என கரைச்சிப் பிரதேச சபையின் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் உறுப்பினர் மோகன்ராஜ் தெரிவித்துள்ளார்.

சபை நடவடிக்கைகள் தொடர்பில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு திட்டத்திற்குச் செலவு செய்யப்படுகின்றபோது நிதிக் குழுவில் அனுமதிக்கு விடப்பட்டு அங்கு அனுமதி பெற்ற பின்னர் சபையின் அனுமதிக்கு விடப்படல் வேண்டும். ஆனால் கரைச்சிப் பிரதேச சபையில் அவ்வாறு எதுவும் இடம்பெறுவது கிடையாது. தன்னிச்சையாகச் சபையின் நடைமுறைகளுக்கு புறம்பாக செலவு செய்து விட்டு இறுதியில் நிதி விடுவிப்புக்குச் சபையின் அனுமதி கோருகின்றனர். இதன்போது நாங்கள் 11 உறுப்பினர்கள் மற்றும் ஏனைய எதிர் தரப்பு உறுப்பினர்களும் எதிர்த்தாலும் பெரும்பான்மையுடன் அவர்கள் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டு செல்கின்றார்கள்.

இவ்வாறு பல்வேறு முறைகேடுகள் கரைச்சிப் பிரதேச சபையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. எனவே இது தொடர்பில் நாம் கணக்காய்வு அலுவலகத்துக்கு தெரியப்படுத்தியிருகின்றோம். இதனையடுத்து வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் உயரதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டு செல்லவுள்ளோம்- என்றார். (ஐ)

## தென்னையிலிருந்து தவறி வீழ்ந்தவர் சாவு!

### சரசாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 15

தென்னை மரத்தில் தேங்காய் பறிக்க ஏறிய குடும்பத் தலைவர் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ் வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது.

சாவகச்சேரி சரசாலை தெற்கைச் சேர்ந்த கந்தையா சத்தியசீலன் (வயது - 46) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 61 பேரின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜன. 15

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் தேசிய தௌபீக் ஜமாத் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கைது செய்யப்பட்ட 61 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவு நேற்று வழங்கப்பட்டது.

நுவரெலியாவில் உள்ள தேசிய தௌபீக் ஜமாத் தலைமைகத்தில் ஆயுதப் பயிற்சி பெற்றனர் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது!

வவுனியா, ஜன. 15

யாழ்ப்பாணத்தில் இருந்து பொலனறுவை நோக்கிக் கேரளக் கஞ்சாவைக் கடத்திச் சென்றவரை வவுனியாப் பொலிஸார் நேற்று முன் தினம் மாலை கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பொலனறுவை நோக்கிச் சென்ற பஸ்ஸில் பயணித்த நபரொருவர் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இறங்கிச் சென்றுள்ளார்.

இந்த நபர் மீது சந்தேகம் கொண்ட வவுனியா பொலிஸ் நிலையப் போதை தடுப்புப் பிரிவினர் சோதனைகளை மேற்கொண்ட போது அவரது உடைமையில் கேரளக் கஞ்சா இருப்பதை அவதானித்தனர்.

சந்தேகநபரைக் கைதுசெய்த பொலிஸார் அவரிடமிருந்து 1 கிலோ 600 கிராம் நிறையுடைய கஞ்சாவை மீட்டனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மன்னாரில் மற்றுமொரு பொலிஸ் அதிகாரி சாவு

மன்னார், ஜன. 15

மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய மற்றொமொரு பொலிஸ் உத்தியோகஸ்தர், டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி விடுமுறையில் சென்ற அநுராதபுரம் - தளாவ பகுதியைச் சேர்ந்த எஸ்.ரத்னாயக்க (வயது - 28) என்ற பொலிஸ் அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதற்கு முன்னர், மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய மதவாச்சி, ஹெத்தாகடஹெட்ட, வீரகொல்லாவ பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பி.சீ.பியரத்தின (வய 45) என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை டெங்கினால் உயிரிழந்தார்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றும் மேலும் 4 பொலிஸ் அதிகாரிகள் காய்ச்சல் காரணமாக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டெங்கு நோய் காரணமாக கர்ப்பிணித் தாய் மரணம்

திருமலை, ஜன. 15

திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிண்ணியா - 3, மாஞ்சோலைப் பிரதேசத்தில் டெங்கு நோய் காரணமாக கர்ப்பிணித் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனக் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

22 வயதான 8 மாதக் கர்ப்பிணித் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வயிற்றில் உள்ள சிசு இறந்ததைத் தொடர்ந்து கிண்ணியா தள வைத்தியசாலையில் இருந்து திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றிய நிலையில் அங்கு அவர் மரணமானார். (ஐ)

## 73 கோடி ரூபா மோசடி செய்த வங்கி உயர் அதிகாரிகள் கைது

கொழும்பு, ஜன. 15

73 கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதியை மோசடி செய்த குற்றத்துக்காக கம்பஹா சனச கிராமிய வங்கியின் முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



வைப்பாளர்களினால் வைப்பில் இடப்பட்ட நிதியே இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை அடுத்தே சனச கிராமிய வங்கியின் முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

மேலதிக விசாரணைகளைக் கம்பஹா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## வட்டுவாகலில் மிதிவெடிகள் மீட்பு

முல்லைத்தீவு, ஜன. 15

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்துக்கு அருகில் உள்ள வட்டுவாகல் ஆற்றங்கரை கடலை அடையும் பகுதியில் இருந்து மிதிவெடிகள் இனம் காணப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு பொலிஸார் 9 மிதிவெடிகளை இனம் கண்டுள்ளனர்.

இவற்றை நீதிமன்ற உத்தரவு பெற்று அகற்றும் நடவடிக்கையில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஐ)



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.





20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிடெட்
இல.11, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.01.2020 இல் வெளியிடப்பெற்றது.